வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 29.03.2023 புதன்கிழமை | இதழ் : 110 | பக்கங்கள் : 16

மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria Money Transfer றியா பணப்பரிமாற்றம்
Western Union Money Transfer வெஸ்ரேண் யூனியன் பணப்பரிமாற்றம்
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

## உள்ளக நிலைமாறுகால பொறிமுறை:

# பாதிக்கப்பட்ட தரப்பினர் நம்பிக்கை இழந்துவிட்டனர்!

## சர்வதேச மன்னிப்பு சபை அறிக்கை

- உள்நாட்டு பொறிமுறைகள் துருவமயப்பட்டுள்ளன
- போர் கால மனித உரிமைகள் மீறலுக்கு தீர்வு இல்லை
- சிறுபான்மையினர் மீது அடக்குமுறை தொடர்கிறது
- காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளுக்கு மிரட்டல்!
- மோசமான பயங்கரவாத தடை சட்டம் தொடர்கிறது!

கொழும்பு, மார்ச் 29

சுயாதீனமாக செயல்பட முடியாதவர்கள் எனக் கருதப்படும் நபர்களின் நியமனங்களால் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான பணிமனை, இழப்பீட்டுக்கான பணிமனை போன்ற உள்நாட்டு நிலைமாறுகால அமைப்புகள் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தவர்களின் நம்பிக்கையை இழந்துவிட்டன என சர்வதேச மன்னிப்பு சபை தெரிவித்துள்ளது. 15






வவுனியா வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயம் அழிக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று நல்லூரில் நடைபெற்ற போராட்டத்தின்போது எடுத்த படம். (படம் - ஐ. சிவசாந்தன்)

## வெடுக்குநாறி சிவன் ஆலயம் விரைவில் மீள அமைக்கப்படும்!

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

கிளிநொச்சி, மார்ச் 29

துஷ்டர்களால் சின்னாபின்னமாக்கப்பட்ட நெடுங்கேணி ஆதிசிவன் ஆலயத்தை விரைவில் மீண்டும் அமைப்பது என்று அமைச்சரவையில் முடிவு எடுக்கப்பட்டதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மேலும், நெடுந்தீவு வெடியரசன் கோட்டை பகுதியில் காட்சிப்படுத்தப்பட்ட தொல்லியல் சின்னம் பற் றிய அறிவிப்பு பலகை தற்போது நீக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார். 15

## பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை முழுமையாக எதிர்க்கின்றோம்!

### சுமந்திரன் எம். பி.

யாழ்ப்பாணம், மார்ச் 29

புதிதாக அறிமுகமாகும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை முற்றாக எதிர்க்கிறோம் என்று இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

பயங்கரவாத தடை சட்டம் நீக்கப்பட்டு பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் 15

## குழந்தைகளில் அதிகளவில் வைரஸ் காய்ச்சல் பரவுகிறது

### குழந்தை நல விசேட மருத்துவர்

கொழும்பு, மார்ச் 29

நாட்டில் தற்போது இன்புளுவன்சா மற்றும் அதனை ஒத்த வைரஸ் காய்ச்சல் குழந்தைகளிடையே அதிகம் பரவுகிறது. தொடர்ந்து மூன்று அல்லது நான்கு நாட்களுக்கு காய்ச்சல் நீடித்தால் உடனடியாக சிகிச்சை பெற வேண்டும் என்று குழந்தை நல விசேட மருத்துவர் நிபுணர் 15

## சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு இரு வாரத்தில் உறுப்பினர் நியமனம்!

கொழும்பு, மார்ச் 29

தேர்தல் ஆணைக்குழு உட்பட சுயாதீன ஆணைக்குழுக்கள் அனைத்துக்குமான உறுப்பினர்கள் நியமனம் இரண்டு வாரங்களுக்குள் பூர்த்தி செய்யப்படும் என சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

சுயாதீன ஆணைக் குழுக்களுக்காக 200இற்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளமையே, ஆணைக் 15



## மகிந்த நட்ட மரத்தை காக்க 54 இலட்சம் ரூபாய் செலவாம்!

புதுடில்லி, மார்ச் 29

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போது இந்தியாவின் மத்திய பிரதேசத்தில் நட்டுவைத்த வெள்ளரச மரத்தை பராமரிக்கவும் - பாதுகாக்கவும் 54 இலட்சம் ரூபாயை (இலங்கை மதிப்பில்) ஆண்டுக்கு செல விட்டு வருகின்றனமை பெரும் சர்ச்சையாகியுள்ளது. 15

### யாழ்., கிழக்கு பல்கலைகளின்

## சித்தமருத்துவத்துறை பீடங்களாக தரமுயர்வு

கொழும்பு, மார்ச் 29

யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகங்களின் சித்த மருத்துவ துறைகளை பீடங்களாக தரமுயர்த்த அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தில் 15

## நடந்து சென்றவர் பின்னால் வந்த வாகனம் மோதி பலி!

### பளையில் நேற்று கொடூரம்

கிளிநொச்சி, மார்ச் 29

நடந்து சென்று கொண்டிருந்தவரை பின்னால் வந்த கனரக வாகனம் மோதித் தள்ளியதில் இளம் குடும்பஸ்தர் உயிரிழந்தார்.

ஏ-9 வீதி, கிளிநொச்சி - பளை - இந்திராபுரம் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் குடும்பத் தகராறு காரணமாக இடம்பெற்ற கொலையாக இருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் பளை பிரதேச மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

வாகனத்தின் சாரதியைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)

## எரிபொருள் விநியோகம் இயல்பு நிலையிலுள்ளது

### எரிசக்தி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 29

எரிபொருள் தட்டுப்பாடு குறித்து பொதுமக்கள் அச்சம் கொள்ளவேண்டாம். தாமதமாகி வந்த எரிபொருள் விநியோகத்துக்கு பொலிஸார் மற்றும் படையினர் பாதுகாப்பு வழங்குவதன் மூலம் இயல்பாக்கப்பட்டுள்ளது -

என்று எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர கேட்டுள்ளார்.

நாட்டில் போதுமான எரிபொருள் இருப்பு உள்ளது. விநியோகம் தொடரும் என்றும் அவர் 15

# இப்படியும் நடக்கிறது...!

கடந்த சில நாட்களாக தெற்கிலிருந்து தொடர்புகொள்கின்ற ஊடகவியலாளர்கள் பலரும் விசாரிக்கின்ற செய்தி, போதகர் போல் தினகரன் மீது குடிவரவு - குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்ட நடவடிக்கை பற்றியதுதான்.

அவரின் வருகை தொடர்பான சுவரொட்டிகள் ஒட்டப்பட்ட மறுதினமே, அவரின் ஆசீர்வாத பெருவிழா நடைபெறவிருந்த மானிப்பாய் பகுதி எங்கும் 'யாழ்ப்பாணம் சிவபூமி. மதமாற்றிகள் நுழையாதீர்கள்' என்று கூறும் சுவரொட்டிகள் சிவசேனை அமைப்பினால் ஒட்டப்பட்டிருந்தன.

போல் தினகரன் சுற்றுலா வீசாவில் வருகை தருவதால் அவர் அப்படியொரு பொது வைபவத்தில் உரையாற்றுவது சட்டவிரோதமானது என்று தெரிவித்து அவர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று குடிவரவு கட்டுக்காட்டாளர் நாயகத்துக்கு சிவசேனை தலைவர் மறவன்புலவு க. சச்சிதானந்தன் கடிதம் எழுதுகின்றார்.

கூடவே, விழா நடைபெறும் இடத்துக்கு முன்னால் சைவர்களை அணிதிரளுமாறும் போராட்டம் ஒன்றுக்கும் அழைப்பு விடுகின்றார்.

அப்படி அழைப்பு விடுத்துவிட்டு, அதனையே காரணம்காட்டி அந்த வைபவம் நடைபெற்றால் சமூகங்களிடையே அமைதியின்மை ஏற்படும் என்று யாழ். பிரதி பொலிஸ் மா அதிபரிடம் அவரே முறையிடுகின்றார்.

ஆக, எந்த எந்த வகையில் அந்த நிகழ்வைத் தடுக்க முயற்சிக்க முடியுமோ அவற்றைச் செய்கின்றார்.

அவரின் கடிதம் கிடைத்ததும், குடிவரவு - குடியகல்வு திணைக்களம் தனிக் குழு ஒன்றை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் அனுப்பி, விமான நிலையத்தில் தினகரன் குழுவினர் வந்து இறங்கியதும் தனித்தனியாக அழைத்துச் சென்று விசாரணை நடத்தி, மானிப்பாய் ஆசிர்வாத பெருவிழாவில் கலந்துகொள்ள தடைவிதிக்கின்றனர்.

மறுநாள் அந்த விழாவுக்கு ஏற்பாடு செய்த போதகர், போல் தினகரன் யாரையும் மதம் மாற்ற வரவில்லை என்றும் தெரிவித்தார்.

இவையெல்லாம் பெரும்பாலும் வாசகர்கள் அறிந்தவைதான்.

இந்த சம்பவம் நடைபெற்று அதுபற்றிய செய்திகள் வெளிவந்த பின்னர், தெற்கில் பல்வேறு தரப்பினரும் இலங்கை சிவசேனை பற்றியும் அதன் ஸ்தாபகர் மறவன்புலவு சச்சிதானந்தன் பற்றியும் அதிகம் கவனம் செலுத்தியிருப்பதை காணமுடிகின்றது.

அதனால்தான் ஊர்க்குருவியுடன் தொடர்புகொள்ளும் பலரும் அவர் பற்றிய விபரங்களைக் கேட்டு தத்தமது ஊடகங்களில் எழுதி வருகின்றனர்.

அதுவல்ல, இந்த ஊக்குருவியை உறுத்துகின்ற விடயம்.

கிறிஸ்தவ போதகர் மீதான சைவர்களின் எதிர்ப்பு நடவடிக்கை நாடு தழுவிய அவதானிப்பை பெற்றிருக்கும் இவ்வேளையில் - அவரின் நிகழ்வுகளுக்குத் தடைகள் ஏற்படுத்தப்படும் ஒரு பரபரப்பான நிலைமையில் - திடீரென்று வவுனியா - நெடுங்கேணி - வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயத்தில் அட்டூழியம் நடைபெற்றிருக்கின்றது. வழமை போலவே, உடனடியாக, அரசாங்கத்தின்மீது அனைத்துத் தரப்பினரதும் கண்டனங்கள் திரும்பிருக்கின்றன. தொல்பொருள் திணைக்களத்தின் பொறுப்பில் இருந்த இடத்தில் இப்படியோர் அட்டூழியம் நடைபெற்றிருப்பதாலேயே அனைவரின் கைகளும் அரசாங்கத்தை நோக்கித் திரும்பியிருக்கின்றன.

அரசாங்கத் தரப்பிலிருந்து இப்படியோர் அநியாயத்தை செய்திருக்கமாட்டார்கள் என்று உறுதியாகச் சொல்லவும் முடியாது என்பது வேறு விடயம்.

ஆனால், சம்பவம் நடைபெற்ற காலமும் நடைபெற்றிருக்கின்ற முறையும் பல சந்தேகங்களைப் பலரிடத்திலும் ஏற்படுத்தியிருக்கின்றது.

அந்த ஆலயத்தில் இருந்த விக்கிரகங்கள் பல உடைத்து வீசப்பட்டிருக்கின்றன. அங்கிருந்த விநாயகர் சிலை, அம்மன் சிலை என்பன பெயர்த்து அகற்றப்பட்டிருக்கின்றன. சில சிலைகள் உடைத்து வீசப்பட்டும் இருக்கின்றன.

பௌத்த ஆலயங்களில் இன்றும் விநாயகரை கணபதி தெய்யோ என்றும் அம்மனை சக்தி என்றும் வைத்து வழிபடுகின்ற பௌத்தர்கள் இவ்வாறு தாம் வழிபடுகின்ற தெய்வங்களின் சிலைகளை அவமதிப்பார்களா என்ற கேள்வியும் எழுகின்றது.

'தமிழர்கள் செறிந்து வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பௌத்த மயமாக்கலை ஏற்படுத்துவது அரசாங்கத்தின் திட்டம் இல்லை. இது தொடர்பில் அரசாங்கம் மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை அடியோடு நிராகரிக்கின்றேன்' என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்திருக்கின்றார்.

இந்த வேளையில்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமெரிக்காவின் ஹாவார்ட் பல்கலைக்கழகத்தில் மாணவர்களிடையே நிகழ்நிலையில் உரையாற்றியபோது, தமிழர்களுடன் தான் முன்னெடுத்துவரும் நல்லிணக்க செயல்பாடுகள் பற்றியும் கூறியிருக்கின்றார்.

அதோடு, ஜனாதிபதி தேர்தலோ பாராளுமன்றத் தேர்தலோ வருமிடத்து, தமிழ் மக்களின் ஆதரவை முழுமையாக எதிர்பார்த்து நிற்கின்றனர் ஜனாதிபதியும் அரசாங்கமும்.

இந்த நிலையில், அரச தரப்பினரின் அனுசரணையுடன் இதுபோன்ற அனர்த்தம் நடந்திருக்கும் என்றும் நம்புவதற்கு கடினமாக இருப்பதாக தமிழர்களில் பலரே கருதுகின்றனர்.

வெடுக்குநாறி மலை சம்பவம் தொடர்பில் அரசாங்க மற்றும் படைத் தரப்பின் அதியுயர் மட்டங்களில் புதிரோடு விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதும் ஊர்க்குருவிக்கு தனிப்படத் தெரியவந்தது.

என்னவாயினும், அது அரச தரப்பினரால் நடத்தப்பட்டதல்ல என்றால், உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடித்து வெளிச்சத்துக்குக் கொண்டுவரவேண்டிய முக்கிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு. அரசாங்கம் உண்மையான நல்லிணக்கத்தை விரும்பினால், உண்மையைக் கண்டறியவேண்டும். அதேவேளை, தாமே அந்த இடத்தில் சிவலிங்கத்தையும் ஏனைய தெய்வங்களின் சிலைகளையும் மீண்டும் பிரதிஷ்டை செய்ய வேண்டும்.

இந்த பத்தியை எழுதி முடித்த பின்னர், சச்சிதானந்தன் அவர்களிடமிருந்து கிடைத்த தகவல் ஒன்று, நெடுக்குநாறியில்இருந்தவற்றை இருந்தவாறே அமைக்க ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணித்திருக்கிறார் என்று தெரிவித்தது.

**- ஊர்க்குருவி**

# ஆளுநர் தனது பதவியை தக்கவைக்க இனவழிப்புக்கு துணைபோகின்றார்!

## கஜேந்திரன் எம். பி. குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 29

வடக்கு ஆளுநர் ஜீவன் தியாகராஜா தனது பதவியைத் தக்கவைத்துக்கொள்வதற்காக பேரினவாதத்தின் தமிழர் மீதான திட்டமிட்ட இனவழிப்புக்கு துணைபோகிறார் என்று பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகர சபையின் ஆளுகைக்கு உட்பட்ட நாவலர் கலாசார மண்டபத்தை ஆளுநர் மத்திய அரசாங்கத்துக்கு வழங்கியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அவரின் செயலகம் முன்பாக நேற்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போராட்டம் நடத்தியது. இதன்போது, ஊடகங் களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், யாழ்ப்பாணத்தில் இருக்கக்கூடிய நாவலர் கலாசார மண்டபம் என்பது தமிழர்களின் பூர்வீக அடையாளங்களில் ஒன்று. அந்த வரலாற்று அடையாளத்தை புத்தசாசன அமைச்சின் கீழ் வருகின்ற திணைக்களம் ஒன்றுக்கு வழங்குவதன் மூலமாக படிப்படியாக சிங்கள - பௌத்த ஆதிக்க விரிவாக்கத்துக்கு உதவுகின்ற நோக்கத்துடன் வடக்கு ஆளுநர் செயல்படுகிறார்.

ஆளுநருடைய இந்த தான்தோன்றித்தனமான இனவாதத்துக்கு எடுபிடியாக மேற்கொள்ளப்படுகின்ற இந்த நடவடிக்கையை நாங்கள் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அவர் தன்னை ஒரு தமிழனாக கூறிக்கொள்கின்ற பொழுதிலும் ஓர் இனத்தின் கருவை அறுத்து இனத்தின் குரல்வளையை நசுக்கி இனத்தின் இரத்தத்திலும் அவலத் திலும் பதவி சுகங்களை அனுபவிப்பதற்காக மீண்டும் ரணிலுடைய பாதங்களை கழுவி பணிவிடை செய்து பேரினவாதத்தை திருப்திப்படுத்தி மீண்டும் இந்த பதவிகளில் நீடிப்பதற்காக இவ்வாறானதோர் அநாகரிக மான செயல்பாட்டில் ஈடுபடுகின்றார். அதை நாங்கள் மிகவும் வன்மையாக கண்டிக்கிறோம் - என்றார். (ஐ)

# தமிழர் இனவழிப்பின் தொடர்ச்சியே வெடுக்குநாறிமலை ஆலய அழிப்பு

## யாழ். மாநகர முன்னாள் முதல்வர்

யாழ்ப்பாணம், மார்ச் 29

தமிழர்கள் மீதான பண் பாட்டு இன அழிப்பின் தொடர்ச்சியே வெடுக்குநாறி மலை பாரம்பரிய வழிபாட்டு தலத்தின் சிதைப்பு என யாழ். மாநகர சபை முன்னாள் முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில், வவுனியா மாவட்டத்தின் வடக்கு எல்லைக் கிராமமான ஒலுமடு வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய விக்கிரகங்கள் அனைத்தும் உடைத்து எறியப்பட்டதும் மலை உச்சியில் பிரதிஸ்டை செய்யப்பட்டிருந்த சிவலிங் கம் புதருக்குள் தூக்கி வீசப் பட்டதும் மிக மிலேச்சத்தனமான செயலாகும்.

தமிழர்களின் பண்பாட்டு பாரப்பரிய வாழ்விடங்களை யும் வழிபாட்டு இடங்களையும் சிங்கள - பௌத்த மயமாக்கலுக்கு உட்டுத்தும் வகையில் மேற்கொள்ளப்படும் ஒரு திட்டமிடப்பட்ட இன அழிப்பின் தொடர்ச்ஞீசியே ஆகும்.

குருந்தூர் மலையில் நீதி மன்ற கட்டளைகளையும் உதாசீனப்படுத்தி பௌத்த விகாரை அமைக்கப்பட்டு வருகையில் தமிழ்ர்களின் பண்பாட்டு பாரம்பரிய வழி பாட்டுத்தலமாக வெட்டுக்கு நாறி மலையில் இருந்த ஆதிலிங்கேஸ்வரர் ஆலய விக்கிரகங்கள் தகர்த்தெறியப் படுகின்றன.

ஓர் இனத்தின் மொழியை யும் அதன் பண்பாட்டுப் பாரம்பரியங்களையும் அழித் தால் அவ்வினம் தானேகவே அழிந்துவிடும் என்பதற்கு உட்பட்டே இவ்வாறான பண்பாட்டு இனஅழிப்பு நட வடிக்கைகள் எமது மண்ணில் வெவ்வேறு வடிவங்களில் தொடர்ந்து அரங்கேற்றப்பட்டு வருகின்றது.

இதற்கு எனது வன்மையான கண்டனங்களைத் தெரிவிப்பதுடன் எமது இனத்தின் இருப்பை பாதுகாப்பதற்கு அனைவரும் ஒன்றுபட்டு நிற்க வேண்டும் என்பதனை காலம் உணர்த்தி நிற்கின்றது - என்றுள்ளது.

(ஐ)









வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கலாநிதி ச. சிறிகாந்தன் தொகுத்த ஈழத்தமிழர் பண்பாட்டாய்வுகள் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் சி. ரமணராஜா, தி. செல்வமனோகரன் ஆகியோர் தொகுத்த சொற்பொருள் விளக்கம் எனும் தமிழகராதி நூல்களின் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் இடம்பெற்றபோது பண்பாட்டலுவல்கள் பிரதி பணிப்பாளர் திருமதி ராஜமல்லிகை சிவசுந்தர சர்மாவிடமிருந்து யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் என். சண்முகலிங்கன், வாழ்நாள் பேராசிரியர் அ. சண்முகதாஸ் மற்றும் அரசறிவியல்துறை பேராசிரியர் கே. ரி. கணேசலிங்கம் ஆகியோர் நூல்களை பெறுவதைக் காணலாம்.

Eelanadu
29.03.2023 புதன்கிழமை
பிலவ வருடம், பங்குனி 15

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழரசு கட்சியின் அடுத்த தலைவர்?

இலங்கை தமிழரசு கட்சியின் அடுத்த தலைவர் தொடர்பில் உள் போட்டிகள் தீவிரமடைந்திருக்கின்றன. தமிழரசு கட்சியின் மாநாட்டை தொடர்ந்தும் பிற்போடுவதற்கு இதுவும் ஒரு காரணமென்னும் அபிப்பிராயமுண்டு. இந்த நிலையில் கட்சியின் மாநாட்டின் பின்னரே யாருக்கு எந்தப் பதவியென்று தீர்மானிக்கப்படுமென்று கட்சியின் தற்போதைய தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்திருக்கின்றார்.

கடந்த பாராளுமன்ற தேர்தலில் மாவை சேனாதிராசா தோல்வியடைந்தார். இதனைத் தொடர்ந்து, அவர் கட்சியின் தலைவராக தொடர்ந்தும் இருப்பதற்கான தகுதியும் கேள்விக்கு உள்ளாகியது. தற்போதைய தமிழ்த் தேசிய அரசியலை பொறுத்தவரையில் பாராளுமன்றத் தேர்தலில் வெற்றிபெறுபவர்களே அரசியலை தீர்மானிப்பவர்களாக இருக்கின்றனர். தேர்தலில் தோல்வியடைந்தால், அதன் பின்னர் அவர்கள் குரலற்றவர்களாகவே இருக்கின்றனர். பதவி இல்லாவிட்டாலும் கட்சியை கட்டுப்படுத்தும் வல்லமையுள்ள அரசியல் கட்சிகளின் தலைவர்கள் எவருமில்லை.

இந்த நிலையில் மாவை சேனாதிராசாவின் தோல்வி அவர் தொடர்ந்தும் தலைவராக இருக்க முடியுமா என்னும் கேள்வியை எழுப்பியிருக்கின்றது. இந்தப் பின்னணியில்தான் தமிழரசு கட்சியின் அடுத்த தலைவர் தொடர்பான சர்ச்சைகள் மேலெழுந்திருக்கின்றன. சுமந்திரனே தகுதியுள்ளவரென்று ஒரு சாரார் கூறுகின்றனர். இன்னொரு சாரார் சிறீதரன் தகுதியுள்ளவரென்று கூறுகின்றனர். இந்த நிலையில் போட்டியில்லாமல் கட்சியின் தலைவரை தெரிவு செய்வதற்கான வாய்ப்பும் மிகவும் குறைவாகவே இருப்பதாகத் தெரிகின்றது. சில வேளைகளில் சில சமரசங்களால் மாற்றங்கள் ஏற்படவும்கூடும். கட்சியின் புதிய தலைவருக்கான வாக்கெடுப்பு ஒன்று வருமிடத்து, சுமந்திரனும் சிறீதரனும் போட்டியிடுவதற்கான வாய்ப்புண்டு.

தமிழரசு கட்சியின் தற்போதைய நிலைமை பெருமளவுக்கு சம்பந்தன் மற்றும் மாவை சேனாதிராசாவின் தொடர்புகளுக்கு உட்பட்டவர்கள் வெளியேற்றப்படுவதான ஒரு தோற்றமே தெரிகின்றது. திருகோணமலையிலும் யாழ்ப்பாணத்திலும் உள்ளூராட்சி தேர்தலுக்கான வேட்டபாளர் தெரிவில் அதிருப்தி இருப்பதாகக்கூறி, அதனை விசாரிப்பதற்கு குழுக்கள் நியமிக்கப்பட்டன என்று செய்திகள் வெளியாகியிருந்தன.

திருகோணமலையில் இதுவரையில் சம்பந்தன் விரும்பியது மட்டுமே நடந்திருக்கின்றது. ஆனால், இனி அது நடக்கப்போவதில்லை, அதனை அனுமதிக்க முடியாதென்னும் ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இந்த நிலையில்தான் சம்பந்தன் இந்த விடயங்கள் தொடர்பில் விசாரணை கோருகின்றார். விசாரணை கோருவதிலிருந்தே, சம்பந்தனின் செல்வாக்கு மோசமான நிலையில் இருப்பது தெளிவாகின்றது. இதே போன்றுதான், யாழ்ப்பாணத்தில் மாவையின் நிலைமை. தமிழரசு கட்சியில் தொடர்ந்தும் இவ்வாறானவர்களோடு பயணிக்க முடியாதென்னும் நிலைப்பாடு வலுவடைந்து வருவதாகவே தெரிகின்றது.

தமிழசு கட்சி பாரம்பரிய கட்சியாக இருந்த போதிலும், ஒரு விபத்தாகவே கட்சி மீண்டும் தமிழ் மக்களுக்குள் முகம் காட்டியது. ஆனந்தசங்கரி சில விடயங்களில் இணக்கிச் சென்றிருந்தால், வீட்டுச் சின்னம் ஒருபோதுமே மீண்டும் அரசியலுக்குள் நுழைந்திருக்காது. மாவை சேனாதிராசாவும் அரசியலில் முக்கியத்துவம் பெற்றிருக்க மாட்டார். ஆனால், அன்றைய சூழலில் ஏற்பட்ட சில எதிர்பாராத விடயங்களால், அரசியல் நிலைமைகளும் எதிர்பாராதவிதமாக மாற்றமடைந்தது. இன்றைய நிலையில் தேர்தல் வெற்றியை தக்கவைக்கக் கூடியவர்கள் மட்டுமே கட்சியின் தலைமைத்துவத்தை கட்டுப்படுத்துவார்கள். இந்தப் பின்புலத்தில் நோக்கினால் மாவையால் அது நிச்சயம் இயலாது.

# முன்னணி, மணிவண்ணன் அணி ஆளுநருக்கு எதிராகப் போராட்டம்!

*யாழ்ப்பாணம், மார்ச் 29*

யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆளுகையில் இருந்த நாவலர் கலாசார மண்டபத்தை வட மாகாண ஆளுநரின் பணிப்பின்பேரில் மத்திய அரசாங்கத்துக்கு வழங்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் அந்தக் கட்சியிலிருந்து பிரிந்து தனியாக செயல்படும் மணிவண்ணன் அணியினரும் கவனவீர்ப்பு போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர்.



யாழ்ப்பாணத்தில் உள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தின் முன்றலில் நேற்று முற்பகல் 10 மணிக்கு நடைபெற்றது.

“ஆளுநரே எலும்புத் துண்டுக்காக தமிழினத்தை விற்காதே,“ ஜீவன் தியாக ராஜாவே உனக்கு மனசாட்சி இல்லையா”, போன்ற கோஷங்களை எழுப்பிய வாறு போராட்டம் நடைபெற்றது.

போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன், முன்னாள் யாழ். மாநகர சபை முன்னாள் உறுப்பினர் வரதராஜா பார்த்தீபன் உள்ளிட்ட உறுப்பினர்கள், கட்சி ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# ‘குருதி கழுவிய குவலயம்’ திருப்பாடுகளின் நாடகம்

*யாழ்ப்பாணம், மார்ச் 29*

திருமறைக் கலாமன்றத்தால் அரை நூற்றாண்டைக் கடந்து வரலாற்று பாரம்பரியத்துடன் தொடர்ச்சியாக ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்பட்டு வருகின்ற திருப்பாடுகளின் நாடகம் இந்த ஆண்டு ‘குருதி கழுவிய குவலயம்’ என்னும் பெயரில் நாளை வியாழக்கிழமை முதல் ஏப்ரல் 02 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நான்கு நாள்களுக்கு மாலை 6.45 மணிக்கு இல.238 ,பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.

திருப்பாடுகளின் நாடக மரபில் தனக்கென்றொரு தனித்துவத்தை தக்கவைத்திருக்கும் திருமறைக் கலாமன்றம் இவ்வாற்றுகையை காலத்திற்கேற்ற அரங்க நுட்பங்களை, சிந்தனைகளை உள்வாங்கி புதிய புதிய பார்வைகளுடன் மேடையேற்றி வந்துள்ளது. இம்முறை மேடையேற்றப்படும் “குருதி கழுவிய குவலயம்“ முதன் முதலாக 1999 ஆம் ஆண்டிலும், அதன் பின்னர் 2005 ஆம் ஆண்டிலும் மேடையேற்றப்பட்டது. தற்போது 18 ஆண்டுகள் கடந்து மீண்டும் மேடையேற்றப்படுகின்றது.

வழமை போலவே பிரமாண்டமான அரங்க அமைப்பு, காட்சியமைப்பு, இசையமைப்பு, ஒலி -ஒளி போன்றவற்றுடன் அரங்கிலும் அரங்கப் பின்னணியிலுமாக இருநூறுக்கும் அதிகமான கலைஞர்களின் பங்கேற்புடன் இந்த நாடகம் அரங்கேறுகின்றது. (ஐ)

# விழிப்புணர்வு கலந்துரையாடல்

*யாழ்ப்பாணம், மார்ச் 29*

யாழ். மாவட்ட என். ஏ. ஐ. ரி. ஏ. நிறுவனத்தில் “பராமரிப்பு சேவையாளர்“ (என். வி. கியூ. தரம் 3) தொழில் கற்கைநெறி பற்றிய விழிப்புணர்வு கலந்துரையாடல் இன்று புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் இந்தக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அதிகளவான வேலை வாய்ப்புகளை பெற்றுக்கொள்ளக் கூடிய பராமரிப்பு சேவையாளர் தொழில் கற்கைநெறி பயிற்சி 6 மாதங்களாகும். அடிப்படை பயிற்சி ஒரு மாதமாகும். மருத்துவமனை பயிற்சி 5 மாதங்களாகும். 16 -35 வயது வரை உள்ளவர்கள் இந்தக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க முடியும். 36 - 40 வயது வரையானவர்களை பரிசீலிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.


# இலவச மருத்துவ முகாம்

*யாழ்ப்பாணம், மார்ச் 29*

தொற்றா நோய்களுக்கான இலவச மருத்துவ முகாம் இன்று புதன்கிழமை காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணிவரை நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் நகரம் - மடத்தடி ஜூப்ளி மருத்துவ நிலையத்தில் நடைபெறவுள்ள இந்த மருத்துவ முகாமில் 40 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் பங்கேற்று பலன்பெற முடியும் என்று யாழ்ப்பாணம் நகரம் - 2 பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கே. பத்மகுமார் அறிவித்துள்ளார்.

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



மார்ச் - 29 புதன்கிழமை
சுபகிருது வருடம் - பங்குனி 15
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : அஷ்டமி




**மேடம்**

சொத்து வாங்குவது விற்பது லாபகரமாக அமையும். புது வாகனம் வாங்குவீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள்.

**இடபம்**

கணவன் - மனைவிக்குள் இருந்த மோதல்கள் நீங்கி குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் லாபம் உண்டு. உத்தியோகத்தில் இழந்த உரிமையை பெறுவீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**மிதுனம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும், கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். யாருக்கும் நீங்கள் சிபாரிசு செய்ய வேண்டாம். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும்.

**கடகம்**

சில காரியங்களை அலைச்சலுடன் திரிந்து முடிக்க வேண்டி வரும். வாகனம் அடிக்கடி தொந்தரவு தரும். வியாபாரத்தில் ஓரளவு லாபம் வரும். உத்தியோகத்தில் ஊழியர்களை அனுசரித்துப் போங்கள்.

**சிம்மம்**

பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வாகன வசதி பெருகும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் அதிகரிப்பார்கள். உத்தியோகத்தில் பாராட்டப்படுவீர்கள். சிந்தனைத் திறன் பெருகும்.

**கன்னி**

உங்களின் அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைக்கு ஏற்ப மாற்றியமைத்துக் கொள்வீர்கள். பிரியமானவர்களுக்காக சிலவற்றை விட்டுக் கொடுப்பீர்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**துலாம்**

கணவன் மனைவிக்குள் அன்னியோன்யம் பிறக்கும். வர வேண்டிய பணம் கைக்கு வரும். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள்.

**விருட்சிகம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் மனஇறுக்கங்கள் உருவாகும். அதிக வேலைச்சுமையால் அவ்வப்போது கோபப்படுவீர்கள். விமர்சனம் கண்டு அஞ்ச வேண்டாம். வியாபாரத்தில் லாபம் மந்தமாக இருக்கும்.

**தனுசு**

விலை உயர்ந்த ஆபரணம் வாங்குவீர்கள். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை மதித்து பேசுவார். திறமைகள் வெளிப்படும் நாள்.

**மகரம்**

உறவினர் நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். விருந்தினர்கள் வருகை உண்டு. எதிர்பாராத பணவரவு உண்டு. வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். அமோகமான நாள்.

**கும்பம்**

சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். நட்பு வழியில் நல்ல செய்தி கேட்பீர்கள். குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள்.

**மீனம்**

கலைப் பொருட்கள் வாங்குவீர்கள். எதிர்ப்புகளையும் தாண்டி முன்னேறுவீர்கள். குடும்பத்தில் சண்டை சச்சரவுகள் வந்து நீங்கும். தாயாரின் உடல் நலத்தில் கவனம் தேவை. புது வேலை அமையும்.

# இலங்கையில் வாழ முடியாமல் தப்பி சென்ற 225 பேர் தமிழகத்தில் பதியப்படாமல் தவிப்பு

சென்னை, மார்ச் 29

பொருளாதார நெருக்கடியால் இலங்கையிலிருந்து வந்த 225 இலங்கைத் தமிழர்கள் மண்டபம் முகாமில் தங்க வைக்கப்பட்டு. ஓராண்டாகியும் அவர்கள் அகதிகளாக பதிவு செய்யப்படவில்லை.

இலங்கையில் உள்நாட்டுப் போர் தொடங்கியதில் இருந்து அகதிகளாக வர தொடங்கிய இலங்கைத் தமிழர்கள் தமிழ்நாட்டில் 9 மாவட்டங்களில் உள்ள 108 மறுவாழ்வு முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர். 19,316 குடும்பங்களைச் சேர்ந்த 58,492 பேர் இங்கு தங்கியுள்ளனர்.

இந்த முகாம்களில் குடும்பத் தலைவருக்கு மாதம் ரூ.1,500, 12 வயதுக்கு மேல் உள்ளோருக்கு ரூ.1000, 12 வயதுக்கு கீழ் உள்ளோருக்கு ரூ.500 உதவித் தொகை, வருடாந்திர கல்வி உதவி, வீடு, மின்சாரம், குடும்பத்துக்கு மாதம் 20 கிலோ இலவச அரிசி, மானிய விலையில் அத்தியாவசியப் பொருட்கள் நியாய விலை கடைகள் மூலம் வழங்கப்படுகின்றன. அவர்கள் வெளியே கூலி வேலைக்குச் சென்று விட்டு மாலையில் முகாம்களுக்கு திரும்ப அனுமதிக்கப்படுகின்றனர்.

ஆனால், 2012ஆம் ஆண்டுக்கு பிறகு இலங்கையில் இருந்து அகதிகளாக வருவோரை காவல் துறையினர் கைது செய்து பாஸ்போர்ட் ஆவணச் சட்டத்தின் கீழும், சட்ட விரோதமாக வந்ததாக வும் 2 பிரிவுகளில் வழக்குப் பதிந்து புழல் சிறையில் அடைக்கின்றனர்.

இந்நிலையில், இலங்கையில் பொருளாதார நெருக்கடியால் 23.3.2022 முதல் தனுஷ்கோடிக்கு வந்த 225 இலங்கை தமிழர்கள் கைது செய்யப்படாமல் மனிதாபிமான அடிப்படையில் மண்டபம் முகாமில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு அரசால் அகதிகளுக்கு வழங்கப் படக்கூடிய உதவித் தொகை எதுவும் வழங்கப்படுவதில்லை. மேலும் தமிழக அரசு மத்திய அரசிடம் தற்போது அகதிகளாக வந்துள்ள இலங்கை தமிழர்களை எப்படி கருதலாம் என கருத்துக் கேட்டு மத்திய அரசின் முடிவுக்காக கடந்த ஓராண்டாக காத்திருக்கிறது.

தற்போது இந்தியாவுக்கு வரும் இலங்கைத் தமிழர்களை அகதிகளாக பதிவு செய்து ஏற்கெனவே தமிழக முகாம்களில் வசிப்போருக்கு வழங்கப்படும் சலுகைகளை வழங்க வேண்டும். இதற்கு தமிழக அரசு உடனடியாக பிரதமரையும், மத்திய அரசையும் வலியுறுத்த வேண்டும் என்பதே மண்டபம் முகாமில் வசித்து வரும் இலங்கை தமிழர்களின் கோரிக்கையாக உள்ளது. (அ)

# வழிபாட்டு தலங்களால் பிரச்னை ஏற்படுவதை அனுமதிக்கக்கூடாது

## தமிழிசை சௌந்தரராஜன்

கச்சதீவில், இலங்கை கடற்படையினர் இரு புத்தர் சிலைகளை திடீரென நிறுவி உள்ளதாக கூறப்படும் தகவல் தற்போது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், கச்சத்தீவில் புத்தர்சிலை நிறுவப்பட்டுள்ளதால் வழிபாட்டுத் தலங்கள் தவறாக நடத்தப்படுவதாகக் கூற முடியாது என, தமிழிசை சௌந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு இடங்களிலும் ஒருசில பிரச்னைகள் வரும்போது, அதற்கு வழிபாட்டுத் தலங்களை அந்த பிரச்னைக்குள் கொண்டுவரக் கூடாது என்பதே தமது கருத்து என்றும் அவர் குறிப்பிட்டார்.

எம்மதமும் சம்மதம் என்ற நிலையில் வழிபாட்டுத் தலங்களால் பிரச்சினைகள் ஏற்படுவதை எந்த அரசாங்கமும் அனுமதிக்கக் கூடாது என்றும் தமிழிசை சௌந்தரராஜன் தெரிவித்துள்ளார். (அ)

# விசாரணைக் கைதிகளின் பற்களை பிடுங்கி தண்டனையளித்த பொலிஸ்

சென்னை, மார்ச், 29

திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரத்தில் காவல் துறையின் விசாரணைக்கு அழைத்து செல்லப்படுவோரின் பற்களை பிடுங்கியது உள்ளிட்ட சித்ரவதை தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சை மீதான நடவடிக்கையாக, ஏஎஸ்பி பல்வீர் சிங் காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

அம்பா சமுத்திரத்தில் உதவி காவல் துறை கண்காணிப்பாளராக பல்வீர் சிங் பொறுப்பு வகித்து வந்தார். அம்பாசமுத்திரம் கோட்ட காவல் துறைக்கு இவர் பொறுப்பேற்றபின், சிறிய குற்றங்களுக்காக காவல் துறை விசாரணைக்கு அழைத்து செல்லப்படுவோரின் பற்களை பிடுங்கி தண்டனை அளித்து வந்ததாக சர்ச்சை எழுந்துள்ளது. 10 இற்கும் மேற்பட்டோருக்கு இவ்வாறு தண்டனை அளித்துள்ளதாகவும், அவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாகவும் கூறப்படுகிறது.

இந்நிலையில், கடந்த சில நாட்களுக்குமுன் ஜமீன் சிங்கம்பட்டியை சேர்ந்த சூர்யா என்பவரை, அப்பகுதியில் கண்காணிப்பு கேமராவை உடைத்து பிரச்சினையை செய்ததாக போலீஸார் பிடித்து காவல் நிலையத்துக்கு அழைத்து சென்றுள்ளனர். அப்போது அவரது பற்களை ஏஎஸ்பி பல்வீர் சிங் பிடுங்கி எடுத்ததாக புகார் எழுந்தது. இது தொடர்பாக சமூக வலைதளங்களிலும் கருத்துகள் பகிரப்பட்டு வந்தன. இளைஞர்களின் பற்களை உடைத்ததுடன், அவர்களது வாயில் ஜல்லி கற்களை போட்டு கொடுமைப் படுத்தியதாகவும் பல்வேறு அமைப்புகளை சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

பற்களை பிடுங்கி தண்டனை அளிக்கும் ஏ.எஸ்.பி, கல்லிடைக் குறிச்சி காவல் ஆய்வாளர் ராஜகுமாரி, சிறப்பு உதவி ஆய்வாளர் ராமலிங்கம் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அப்பகுதியை சேர்ந்த அமைப்புகளை சேர்ந்தவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இது குறித்து நேதாஜி சுபாஷ் சேனை நிறுவன தலைவர் வழக்கறிஞர் மகாராஜன் கூறும்போது, “அம்பாசமுத்திரம் பகுதியில் சிறு தவறுகளை செய்யும் இளைஞர்கள் 10 பேரை காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து அவர்களது பற்களை ஏஎஸ்பி பல்வீர் சிங் உள்ளிட்ட போலீஸார் பிடுங்கியுள்ளனர். காவல் நிலையங்களில் தவறு செய்தால் கை கால்களை உடைப்பார்கள் என்று தான் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் பற்களை பிடுங்கி எடுப்பது இப்போதுதான் முதல் முறையாக நடைபெறுவது தெரியவந்துள்ளது.

பற்களைப் பிடுங்கி வருவது பலரின் உயிருக்கு ஆபத்தாக உள்ளது. பற்களை பிடுங்கியதால் பாதிக்கப்பட்ட 3 பேர் திருநெல்வேலி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் கூட சிகிச்சை பெற்றுள்ளனர். எனவே, ஏஎஸ்பி மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அவரை உடனடியாக கைது செய்ய வேண்டும் என்று நாங்கள் கோரிக்கை வைத்துள்ளோம் அவர் மீது மனித உரிமை ஆணையத்திடம் புகார் தெரிவிக்க உள்ளோம். மேலும் அவர் மீது சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு தொடர உள்ளோம்” என்று தெரிவித்தார்.

இந்த சர்ச்சையை அடுத்து தமிழகத்தில் பல்வேறு அரசியல் கட்சி தலைவர்களும் இந்த விவகாரம் தொடர்பாக விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி அறிக்கைகளை வெளியிட்டனர்.

இதனிடையே, இந்த சர்ச்சை தொடர்பாக விசாரணை நடத்தி அறிக்கை அளிக்கும்படி சேரன்மகாதேவி சார் ஆட்சியர், முகமது சபீர் ஆலத்துக்கு திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் கா.ப. கார்த்திகேயன் உத்தரவிட்டுள்ளார். உரிய புகார்கள் வரப்பெற்றதும் அதிகாரிகள் விசாரணை மேற்கொள்ளப்படும் என்று தெரிகிறது. இதனிடையே, ஏ.எஸ்.பி பல்வீர் சிங்கை காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றி காவல் துறை தலைமை நடவடிக்கை எடுத்துள்ளது. (அ)

# குறைந்த பணவீக்கம் உள்ள நாடுகளின் பட்டியலில் இலங்கையும் இடம்பெறும்

கொழும்பு, மார்ச் 29

இந்த வருட இறுதிக்குள் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் கணிசமான அளவில் குறையும், குறைந்த பணவீக்க வீதத்தைக் கொண்ட நாடுகளில் இலங்கையும் இடம்பெறும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

குருநாகல் மாவட்டத்தில் வார இறுதியில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றிய விஜேவர்தன, அதிக பணவீக்க வீதத்தைக் கொண்ட நாடுகளில் இலங்கை தற்போது 20 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

சில மாதங்களுக்கு முன்னர் உலகில் மூன்றாவது அதிக பணவீக்க வீதத்தைக் கொண்ட நாடாக இலங்கை இருந்தது. ஆனால் இன்று அது தரவரிசையில் 20 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

இலங்கையை மிகக் குறைந்த பணவீக்க வீதத்தைக் கொண்ட நாடாக மாற்றுவதே தனது நோக்கம் என்று ஜனாதிபதி ஏற்கனவே கூறியிருந்தார்-என்றார்.

இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைத்துள்ளது.

இந்நிலையில், எரிபொருள் போன்ற பல அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைக்கப்படவுள்ளதால், வருட இறுதிக்குள் மக்கள் சில சலுகைகளை அனுபவிக்க முடியும் என அவர் மேலும் கூறினார். (அ)

# அலி சப்ரி, விஜயதாஸவின் செயல்கள் கேலிக்குரியவை

## அம்பிகா சற்குணநாதன் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 29

**இலங்கையில் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் யுத்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான உண்மையை கண்டறிய மேலும் ஒரு குழுவை நியமிப்பதானது கேலிக்குரிய செயலாகும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற சர்வதேச மன்னிப்புச் சபையின் வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கும் நிகழ்வில் பங்கேற்றபோது ஊடகங்களுக்கு கருத்துரைக்கையிலேயே முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் இதனை தெரிவித்தார்.

இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் யுத்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கையை சமர்ப்பித்துள்ளது.

இந்த நிலையில், அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ள விடயங்கள் இதுவரை அமுல்படுத்தப்படாத நிலையில், புதிய ஆணைக்குழு ஒன்றினை அமைப்பதற்கும், அந்த விடயங்கள் தொடர்பில் கற்றாராய்வதற்கும் அமைச்சர்களான விஜேதாச ராஜபக்ஷ மற்றும் அலி சப்ரி ஆகியோர் முயற்சிக்கின்றனர்.

அமைச்சர்களின் இந்த செயலை கேலிக்குரிய செயலாகவே அவதானிக்க முடியும் என முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் தெரிவித்தார். (அ)

# அரசியலில் இருந்து ஓய்வுபெறுகிறார் ரோசி!



கொழும்பு, மார்ச் 29

“அரசியலில் இருந்து ஓய்வு பெறும் எண்ணத்துடனேயே இருக்கின்றேன். இம்முறை மாத்திரமே தேர்தலில் போட்டியிடுகின்றேன். இனி போட்டியிடபோவதில்லை.” - என்று ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரும், கொழும்பு மாநகரசபையின் முன்னாள் மேயருமான ரோசி சேனாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

“நான் கொள்கை அடிப்படையில் அரசியல் நடத்தும் நபர். எனவே, ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு செல்லமாட்டேன்.

தேசிய அரசியலில் இருந்து ஓய்வுபெற திட்டமிட்டேன். கொரோனா, பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட காரணங்களால் மேயராக சில வேலைத் திட்டங்களை முன்னெடுக்க முடியாமல் போனது. எனவே, திட்டங்களை முன்னெடுக்கவும், நான் தலைமைத்துவம் வழங்கிய அணிக்காகவுமே இம்முறை போட்டியிடுகின்றேன். இனிமேல் தேர்தலில் களமிறங்கமாட்டேன்.” - என்றார். (அ)

# கலப்பு உரங்களின் விலை 50 வீதத்தினால் வீழ்ச்சி!

கொழும்பு, மார்ச் 29

மரக்கறி, தேங்காய், தேயிலை, கறுவா உள்ளிட்ட பயிர்களுக்குப் பயன்படுத்தப்படும் கலப்பு உரங்களின் விலை 50 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதாக வர்த்தக உரக் கம்பனியின் தலைவர் கலாநிதி ஜகத் பெரேரா விவசாய அமைச்சர் மகிந்த அமரவீரவிடம் தெரிவித்துள்ளார்.

நெல் மற்றும் சோளப் பயிர்களுக்கு அரசாங்கத்தின் உரத் திட்டத்தின் கீழ் இரசாயன உரங்கள் வழங்கப்பட்ட போதிலும், ஏனைய பயிர்களுக்குப் பயன்படுத்தப்படும் உரங்களின் பற்றாக்குறை தொடர்பில் விவசாயிகள் விவசாய அமைச்சுக்கு தொடர்ந்து முறைப்பாடு செய்திருந்தனர்.

அந்த உண்மையை கருத்தில் கொண்டு நெல் மற்றும் சோளம் தவிர்ந்த ஏனைய பயிர்களுக்கு பயன்படுத்தக்கூடிய கலப்பு உரத்தை தயார் செய்யுமாறு விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர இரண்டு அரச உர நிறுவனங்களின் தலைவர்களுக்கும் ஆலோசனை வழங்கினார்.

தற்போது சந்தையில் விற்பனை செய்யப்படும் கலப்பு உரங்களின் விலையை விட மிகக் குறைந்த விலையில் இலங்கை உர நிறுவனம் மற்றும் கொமர்ஷல் உர நிறுவனம் இணைந்து சில புதிய உயர்தர கலப்பு உரங்களை அறிமுகப் படுத்தியுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக சந்தையில் கலப்பு உரங்களின் விலை 50 வீதத்தால் குறைந்துள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.(அ)

# ஐக்கிய தேசிய கட்சியில் இணைகின்றார் எஸ்.பி.?



கொழும்பு, மார்ச் 29

பொதுஜன பெரமுன கட்சியின் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவாரென தகவல் வெளியாகியுள்ளது.

இதற்கான பேச்சுகள் வெற்றியளித்துள்ளது எனவும், அடுத்து நடைபெறும் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் பட்டியலின்கீழ்தான் அவர் போட்டியிடுவாரெனவும் தெரியவருகின்றது.

விரைவில் நடைபெறும் அமைச்சரவை மறுசீரமைப்பின்போது, எஸ்.பி. திஸாநாயக்கவுக்கு அமைச்சு பதவியொன்றும் வழங்கப்படவுள்ளது.

எது எப்படி இருந்தாலும் இது தொடர்பில் இன்னும் அதிகாரப்பூர்வ தகவல் எதுவும் வெளியாகவில்லை. (அ)

# சாந்த பண்டாரவுக்கு பதில் அமைச்சுப் பதவி



கொழும்பு, மார்ச் 29

வெகுஜன ஊடக இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார, ஊடகத்துறையின் பதில் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதன்படி, அமைச்சரவைப் பேச்சாளரும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான பந்துல குணவர்தன தற்போது வெளிநாட்டில் உள்ளதை கருத்திற்கொண்டு, ஊடகத்துறையின் பதில் அமைச்சராக சாந்த பண்டார நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளது. (அ)

# சட்டமா அதிபர் திணைக்கள கடிதத் தலைப்புகளை போலியாக தயாரித்த குற்றச்சாட்டில் மூவர் கைது!

கொழும்பு, மார்ச் 29

சட்டமா அதிபர் திணைக்களத்தின் போலி கடிதத் தலைப்புகளை தயாரித்த அழகுக்கலை நிபுணர் உட்பட மூவரை குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் விசேட காவல்துறை குழு கைதுசெய்துள்ளனர்.

கொழும்பில் இருந்துசென்ற குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் கண்டி இணையக் குற்ற விசேட விசாரணை பிரிவினரின் அனுசரணையுடன் கண்டி, கட்டுகஸ்தோட்டையில் வைத்து இவர்களை கைதுசெய்துள்ளனர்.

47 வயதுடைய அழகுக் கலை நிபுணர், கட்டுகஸ்தோட்டை செனரத்கம பிரதேசத்தை சேர்ந்தவராவார்.

கைது செய்யப்பட்ட இரண்டாவது நபர் கண்டி, அஸ்கிரிய சுமங்கல மாவத்தையைச் சேர்ந்த 48 வயதான மின்னியலாளர் ஒருவரென குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மூன்றாவது சந்தேக நபர் கண்டி, மஹய்யாவ பகுதியைச் சேர்ந்த 54 வயதான வர்த்தகரொருவராவார்.

மூன்று சந்தேக நபர்களும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் கடிதத் தலைப்புகளை போலியாக தயாரித்து, சட்டமா அதிபரின் போலி கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரையை உள்ளடக்கியுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்கள் குறித்த போலியான ஆவணங்களைப் பயன்படுத்தியுள்ளதாகவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# கழிவகற்றல் செயல்பாட்டில் ஈடுபட்ட இருவர் உயிரிழப்பு!

கொழும்பு, மார்ச் 29

**கழிவகற்றல் கட்டமைப்பு திருத்தப்பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மூவரில் இருவர் தவறி விழுந்து உயிரிழுந்தனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.**

கொழும்பு - கொட்டாஞ்சேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஹெட்டியாவத்தை சந்தியில் கழிவகற்றல் கட்டமைப்பு திருத்தப்பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இருவர் குழியில் தவறி விழுந்தனர். இருவரும் மீட்கப்பட்டு கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் இருவரும் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்கள் 28 மற்றும் 38 வயதுடைய கொழும்பு பிரதேசங்களை சேர்ந்த - கொழும்பு மாநகர சபை ஊழியர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவர்களில் ஒருவர் கழிவகற்றல் குழியில் தவறி விழுந்தநிலையில் அவரை காப்பாற்றுவதற்கு முயன்ற மற்றைய நபரும் குழிக்குள் தவறி விழுந்தார் என்று ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் கொட்டாஞ்சேனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

# ரூ. 2 கோடி பெறுமதியான நகைகள் திருடப்பட்டன!

கொழும்பு, மார்ச் 29

கோடீஸ்வர வர்த்தகர் ஒருவரின் மூடப்பட்ட வீட்டுக்குள் சிலர் நுழைந்து இரண்டு கோடி ரூபா பெறுமதியான தங்க நகைகளையும் வெளிநாட்டு மதுபான போத்தல்களையும் திருடப்பட்டுள்ளதாக மஹரகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

102 பவுண் தங்க நகைகள், பெறுமதியான கைக்கடிகாரம் மற்றும் 300 அமெரிக்க டொலர்கள், 40 வெளிநாட்டு மதுபான போத்தல்கள் மற்றும் என்பனவும் திருடப்பட்டுள்ளன என்று குறித்த கோடீஸ்வரர் பொலிஸில் வழங்கிய முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

நுகேகொடை, தலபாபிட்டிய பகுதியில் உள்ள வீட்டில் வர்த்தகர் வசிக்கிறார் என்றும் - பன்னிபிட்டி வீடு சுமார் இரண்டு மாதங்களாக மூடப்பட்டிருந்ததாகவும் பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ஐ)

# உரம் வழங்க மறுத்த அதிகாரியை கழுத்தறுத்துக் கொன்ற விவசாயி!

கொழும்பு, மார்ச் 29

உரம் பெறுவதற்கான ஆவணத்தில் கையொப்பமிட மறுத்த விவசாய உத்தியோகத்தர் கழுத்தறுத்து கொல்லப்பட்டார். உரம் கிடைக்காத கோபத்தில் விவசாயியொருவர் இந்த கொடூர கொலையை செய்துள்ளார் என்று தெரிய வருகின்றது.

தங்காலை, வெலியார பகுதியில் நேற்று முன்தினம் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறியவருவதாவது, நேற்று முன்தினம் காலை 8.00 மணியளவில் விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர் கடமைக்கு சென்று கொண்டிருந்த போது, அவரை துரத்திச் சென்ற சந்தேக நபர் கூரிய ஆயுதத்தால் கழுத்தை அறுத்துவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

பின்னர், அப்பகுதி மக்கள் அவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். ஆனால் அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேலும், சந்தேக நபர் விவசாயத்தை வாழ்வாதாரமாக மேற்கொண்டு வருகிறார். விவசாய உரம் பெறுவதற்குத் தேவையான கடிதம் வழங்குவதில் காலதாமதம் ஏற்படுவது தொடர்பாக அவருக்கும், விவசாய அதிகாரிக்கும் இடையில் தகராறு ஏற்பட்டுள்ளதுடன்.

இதனால், ஆத்திரமடைந்த சந்தேக நபர் விவசாய அலுவலரை பலமுறை அச்சுறுத்தியுள்ளார். 26ஆம் திகதி இரவு, சந்தேக நபர் அவரது வீட்டுக்குச் சென்றும் மிரட்டியுள்ளார் என்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார். (ஐ)

## போதைக்கு எதிராக விழிப்புணர்வு:

# தந்தையை நிறுத்துமாறு கூறி மகன் மீது கும்பல் தாக்குதல்!

மன்னார், மார்ச் 29

போதைப்பொருள் தடுப்பு தொடர்பான விழிப்புணர்வை பாடசாலைகளில் நடத்த வேண்டாம் என தந்தைக்குக் கூறுமாறு அச்சுறுத்தி பொதுச் சுகாதார பரிசோதகரின் மகன்மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மன்னார், சிலாவத்துறையில் இடம்பெற்ற இந்தத் தாக்குதல் தொடர்பில் ஆறு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று சிலாவத்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலுக்கு இலக்கான மாணவன் மன்னார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் வீட்டுக்கு வந்தவர்கள் அவரின் 15 வயதான மகனை அழைத்துச் சென்று இந்தத் தாக்குதலை நடத்தினர் என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்த மாணவன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். எனினும், அவருக்கு பாரதூரமான காயங்கள் எதுவும் இழைக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை தொடர்ந்து வருகின்றனர். (ஐ)

# எரிபொருட்களை ரூ. 120 வரை குறைத்து விற்பனை செய்யலாம்!

## தொழில்சங்க பேச்சாளர்

கொழும்பு, மார்ச் 29

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி உயர்வால் அரசாங்கம் அனைத்து எரிபொருள் வகைகளின் விலைகளையும் குறைந்தபட்சம் ரூ.120 குறைக்கலாம் என ஐக்கிய தொழில் சங்கப் படையின் பேச்சாளர் ஆனந்த பாலித தெரிவித்தார்.

95 ஒக்ரைன் 95 பெற்றோல் ஒரு லீற்றரின் சில்லறை விலை குறைந்தபட்சம் 125 ரூபாவால் குறைக்க முடியும். ஒரு லீற்றர் நாப்தா, ஃப்ரனஸ் ஒயில் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலைகளையும் எந்த பிரச்னையும் இல்லாமல் ரூ.110 குறைக்கலாம் என்றார்.

முன்னதாக, எரிசக்தி அமைச்சர் பாராளுமன்றத்தில் கூறுகையில், எதிர்வரும் ஏப்ரல் 1 ஆம் திகதி நடைபெறவுள்ள எரிபொருள் விலைத் திருத்தத்தின் போது, நுகர்வோர்களால் உணரக்கூடிய வகையில், விலைகள் கணிசமான அளவு குறைக்கப்படலாம் எனத் தெரிவித்தார்.

“அந்த கணிசமான அளவு 100 ரூபாய்க்கு அதிகமாக இருக்க வேண்டும். ஆனால் விலையை 50 ரூபாய் குறைப்பது சுரண்டல்” என்றும் அவர் கூறினார்.

ஒரு லீற்றர் டீசலின் சில்லறை விலை குறைக்கப்பட்டால் மின் கட்டணத்தில் கணிசமான குறைப்பு ஏற்படும். நாப்தா மற்றும் டீசல் எரிபொருள் உள்ளூர் சுத்திகரிப்பு நிலையங்களால் 100 வீதம் சுத்திகரிக்கப்படுகிறது.

“உலகச் சந்தையில் மிகக் குறைந்த சந்தை விலையில் கச்சா எண்ணெய் வாங்கப்படுகிறது. அதன்படி, நாப்தா, ஃப்ரனஸ் ஒயில், மண்ணெண்ணெய் ஆகியவற்றின் சில்லறை விலையை அதிக அளவில் குறைக்கலாம்,” என்றார்.

# முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிறீரங்காவின் விளக்கமறியல் நீடிப்பு!

வவுனியா, மார்ச் 29

கார் விபத்தில் பொலிஸ் சார்ஜன்ட் உயிரிழந்த வழக்கில் சாட்சிகளுக்கு அழுத்தம் கொடுத்தமை, நீதிமன்றத்தில் முன்னிலையாகாத குற்றச்சாட்டுகளில் கைது செய்யப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜே. சிறீரங்காவை எதிர்வரும் மே 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்.

கடந்த 17ஆம் திகதி, வவுனியா மேல் நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டதையடுத்து கொழும்பு தெற்கு போதனா மருத்துமவனையில் வைத்து பொலிஸாரால் சிறீரங்கா கைது செய்யப்பட்டார்.

2011 மார்ச் 30 ஆம் திகதி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிறீரங்கா மதவாச்சியிலிருந்து செட்டிக்குளம் பகுதிக்கு பயணித்த வாகனம், செட்டிக்குளம் மருத்துவமனைக்கு முன்பாக, விபத்துக்கு உள்ளானதில் அவருடன் பயணித்த மூன்று பிள்ளைகளின் தந்தையான சார்ஜன்ட் (36759) ஜி. உதய ஜெயமினி புஷ்பகுமார உயிரிழந்தார்.

உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தரே காரை செலுத்தி சென்றார் என்று தெரிவிக்கப்பட்டு, விசாரணை முடிந்ததாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

விபத்து தொடர்பில் உயிரிழந்த சார்ஜன்ட்டின் மனைவி செய்த முறைப்பாட்டின் பிரகாரம், பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் நடத்திய விசாரணையில், அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர் ஜே. சிறீ ரங்காவே வாகனத்தை செலுத்தி விபத்தை ஏற்படுத்தியமை தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் வவுனியா மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை வழங்கப்பட்ட பின் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

விசாரணையில் சாட்சியமளித்த இருவருக்கு தொலைபேசி மூலம் அழுத்தம் கொடுத்தது தொடர்பிலான விசாரணை அறிக்கை மற்றும் தொலைபேசி பகுப்பாய்வு அறிக்கைகளை பொலிஸார் நீதிமன்றில் சமர்ப்பித்தனர்.

தகவல்களை மறைத்த குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் செட்டிக்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் சுகத் ரொஷான் சஞ்சீவ நீதிமன்றில் முன்னிலையாகி குற்றத்தை ஒப்புக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வான் மோதியதில் மாணவன் பலி!

மட்டக்களப்பு, மார்ச் 29

சைக்கிளில் சென்ற மாணவனை வான் மோதித் தள்ளியதில் தொழில்நுட்ப கல்லூரி மாணவன் ஒருவர் உயிரிழந்தார்.

மட்டக்களப்பு - காத்தான்குடி - நாவற்குடா பிரதான வீதியில் நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் முஹமட் அன்பாஸ் (17 வயது) என்பவரே உயிரிழந்தார்.

மட்டக்களப்பிலிருந்து கல்முனை நோக்கி வந்துகொண்டிருந்த வான் சைக்கிளில் சென்ற மாணவனை மோதித் தள்ளிவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

விபத்து நடந்த இடத்தில் வானின் இலக்கத்தகடு மீட்கப்பட்டுள்ளது. (ஐ)

# மகளின் காதலை கண்டித்த தாயாரை மிரட்டியவர் கைது

மட்டக்களப்பு, மார்ச் 29

17 வயதே ஆன தனது மகளின் காதலுக்கு எதிர்ப்பு தெரிவித்த தாயாரை வாளைக் காட்டி எச்சரித்தார் இளைஞர் ஒருவரையும் அவரின் நண்பரையும் மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது, பாடசாலை ஒன்றில் கல்வி கற்றுவரும் சிறுமியை அதே தரத்தில் கல்வி கற்றுவரும் சிறுவன் ஒருவன் காதலித்து வந்துள்ளார் என்று கூறப்படுகின்றது. இதனையறிந்த சிறுமியின் தாயார் காதலுக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார். 17 வயதுடைய காதலனும் அவனது நண்பனும் சேர்ந்து வாள் மற்றும் கூரிய ஆயுதத்துடன் படம் எடுத்து அதற்கேற்றால் போல் சில பாடல்களை பதிவு செய்து ரிக்ரோக்கில் பதிவிட்டு சிறுமியின் தாயாரை அச்சுறுத்தியுள்ளனர்.

சிறுமியின் தாயாரின் முறைப்பாட்டையடுத்து இருவரும் கைது செய்ப்பட்டு எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர். (ஐ)

# வெடுக்குநாறிமலை சைவ ஆலயம் அழிப்பு வன்முறையை தூண்டும் திட்டமிட்ட செயல்!

## வட, கிழக்கை சிவபூமியாக சித்திரிக்கும் திட்டம் என்றும் சக்திவேல் சாடல்

கொழும்பு, மார்ச் 29

**வெடுக்குநாறிமலை சைவ ஆலயம் சிதைக்கப்பட்டமை சைவ மக்களை பலவந்தமாக வன்முறைக்கு இட்டு செல்லும் திட்டமிட்ட இனவாத அரசியலாகும் என சமூக நீதிக்கான செயல்பாட்டாளர் அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.**

**அத்துடன், வட, கிழக்கை சிவ பூமியாக சித்திரிக்கும் வேலை திட்டத்தின் ஓர் அங்கமாக ஆனையிறவில் நடனமாடும் சிவன் உருவச் சிலை வைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் சாடியுள்ளார்.**

இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில்,

வட, கிழக்கை சிங்கள பௌத்த மயமாக்கும் அடாவடி பயங்கரவாத தொல்பொருள் திணைக்களத்தோடு பயங்கரவாத இன அழிப்பு அரசியல் சக்திகள் தமிழர்களின் தேசியத்தை சிதைக்க களமிறக்கப்பட்டுள்ளன. தற்போது தொடர்ச்சியாக சைவர்களின் வழிபாட்டு தலங்களை சிதைப்பதும் பக்தி சின்னங்களை உடைத்தழிப்பதும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையிலேயே, வவுனியா வெடுக்குநாறி மலை சைவ ஆலயம் சிதைக்கப்பட்டுள்ளது. இது சைவ மக்களை பலவந்தமாக வன்முறைக்கு இட்டுச் செல்லும் திட்டமிட்ட இனவாத அரசியலாகும். இதனை வன்மையாகக் கண்டிப்பதோடு, இதற்குப் பின்னால் இருக்கும் அரசியலையும் அரசியல் சக்திகளையும் தமிழ் அரசியல் தலைமைகளும், சமயத் தலைமைகளும் வெளிப்படுத்தாவிடின் இன்னும் ஒரு பயங்கர அரசியல் முள்ளிவாய்க்கால் அழிவை சந்திக்க வேண்டி ஏற்படும்.

ஏற்கனவே மன்னார் பிரதேசத்தில் நீண்ட காலமாக சைவர்களுக்கும் கத்தோலிக்கர்களுக்கும் இடையில் பிரச்னை நிலவுகின்றது. இதனை சரியான வகையில் கையாள்வதற்கும் தீர்ப்பதற்கும் சமயத் தலைமைகள் தவறியுள்ளனர். அரசியல் தலைமைகளும் பாராமுகமாக உள்ளனர். நீறு பூத்த நெருப்பாக காணப்படும் இப் பிரச்னை தொடர்ந்து நீடிப்பதற்கு சமயத் தலைமைகள் இடம் கொடுக்கக் கூடாது என்பதை மீண்டும் வலியுறுத்துகின்றோம்.

வட, கிழக்கை சிவ பூமியாக சித்திரிக்கும் வேலை திட்டத்தின் ஓர் அங்கமாக ஆனையிறவில் நடனமாடும் சிவன் உருவச் சிலை வைக்கப்பட்டுள்ளது. அன்று ஆனையிறவை விடுதலைப் புலிகள் உயிர் தியாகத்தோடு கைப்பற்றியபோது இருந்த மகிழ்ச்சி நடனமாடும் சிலை வைக்கப்பட்ட போது ஏற்படவில்லை. வட, கிழக்கில் எந்த சலசலப்பையும் ஏற்படுத்தவுமில்லை. இதற்கு மத்தியில் திருவள்ளுவர் இந்துவா? இல்லையா? எனும் பட்டிமன்றமும் நீண்டு செல்கின்றது.

இவை எல்லாவற்றுக்கும் மத்தியில் யுத்த வெற்றியை மீண்டும் அடையாளப்படுத்தும் முகமாக முப்படைகளின் தளபதி சவேந்திர சில்வா தாது கோபுர திரை நீக்கத்துக்கு சிங்கள நடனத்தோடு அழைத்து வரப்படுகின்றார். இதன் தொடர்ச்சியாகவே கச்சதீவில் களவாக புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளது. இது சைவர்களை தனியாகவும், கிறிஸ்தவர்களை தனியாகவும், தமிழர்களின் தேசியம் காக்கும் அரசியல் கதைப்போரை தனியாகவும் பிரித்துவிட்டு அரசியல் குளிர்காயும் தந்திரமும் ஆகும்.

இன்னொரு பக்கம் இந்துக்களையும், கிறிஸ்தவர்களையும் தமது பாதுகாப்புக்காக இந்தியாவை அரவணைப்பை ஏற்றுக்கொள்ள வைக்கும் மனநிலையைத் தூண்டுவதோடு இந்தியாவின் தலையீட்டால் 13 ஐ ஏற்றுக்கொள்ள வைக்கும் அரசியல் சதியும் இதன் மூலம் அரங்கேறலாம்.

ஆதலால் வடகிழக்கு மற்றும் மலையக அரசியல் தலைவர்கள் அரசியல் தெளிவோடு சமயத் தலைவர்களையும் இணைத்துக் கொண்டு அரசியல் பயணம் மேற்கொள்ளல் வேண்டும். இச்சந்தர்ப்பத்தைக் கூட்டாக பற்றிக் கொள்ளவில்லையெனில் தமிழர்கள் இன்னும் ஓர் அழிவையே சந்திப்பர். இதற்கு அரசியல் மற்றும் சமயத் தலைவர்கள் இடம் கொடுக்கக் கூடாது - என்றுள்ளது. (ஐ)

# 5 ஆயிரம் மாணவர்களுக்கு வட்டியில்லா கடன் வழங்கல்

## அமைச்சரவை அனுமதி வழங்கியது

கொழும்பு, மார்ச் 29

'வட்டியில்லா மாணவர் கடன்' திட்டத்தின் கீழ் அரசு சாரா உயர் கல்வி நிறுவனங்களில் பட்டப்படிப்பை மேற்கொள்ள 5 ஆயிரம் மாணவர்களுக்கு கடன் வசதிகளை வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அரச பல்கலைக்கழகங்களில் உள்வாங்குவதற்கான வெட்டுப் புள்ளிகள் போதியளவு இல்லாத மாணவர்களுக்கு, அரசு சாரா, பட்டப்படிப்பை மேற்கொள்கின்ற அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் பட்டப் படிப்பைத் தொடர்வதற்காக வட்டியில்லா கடன் வசதிகள் வழங்கும் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக கடந்த 2017.04.04 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

தற்போது ஐந்து மாணவர் அணிகள் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நன்மைகளைப் பெற்றுள்ளன. ஆறாவது அணிக்குத் தகைமை பெறுகின்ற மாணவர்கள் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைய, இதுவரை கடைப்பிடிக்கப்பட்டு வந்த பொறிமுறைக்கு அமைய வட்டியில்லா மாணவர் கடன் திட்டத்தைத் தொடர்ந்து மேற்கொள்ளவும், அதன் கீழ் ஏழாவது அணியில் 5 ஆயிரம் மாணவர்களுக்கான வசதிகளை வழங்குவதற்கு கல்வி அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

(ஐ)

# சனத் நிஷாந்தவுக்கு எதிரான மனுக்கள் ஜூனில் விசாரணை

கொழும்பு, மார்ச் 29

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மூன்று மனுக்களை எதிர்வரும் ஜூன் 27ஆம் திகதி விசாரணைக்கு எடுக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்த முறைப்பாடுகள் நேற்று முன்தினம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதிபதி நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஏ. மரிக்கார் மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வுக்கு அழைக்கப்பட்டன. இதன்போது பிரதிவாதியான இராஜாங்க சனத் நிஷாந்தவும் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தார்.

பிரதிவாதியான இராஜாங்க அமைச்சரின் வாக்குமூலத்தை உள்ளடக்கியதாகக் கூறப்படும் காணொலி தொடர்பான அரசாங்க பரிசோதகர் அறிக்கை நீதிமன்றத்துக்கு கிடைத்துள்ளதாக பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி கிரிஹாகம நீதிமன்றத்துக்கு அறிவித்தார். (ஐ)

# 25 வயது யுவதி மர்ம மரணம் விசாரணையில் பொலிஸார்

கொழும்பு, மார்ச் 29

25 வயது பெண் மர்மமான முறையில் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் இரத்தினபுரி எலபாத பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

எலபாத்த, கிரியெல்ல பிரதேசத்தில் உள்ள நீரோடைக்கு அருகே நேற்று முன்தினம் இந்தப் பெண் சடலமாக மீட்கப்பட்டார்.

உயிரிழந்தவர் நிரியெல்ல பகுதியைச் சேர்ந்த 25 வயதுடையவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உயிரிழந்த பெண்ணை நேற்றுமுன்தினம் காலை முதல் காணவில்லை என்று பெண்ணின் தாயார் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

பொலிஸாரின் தேடுதலில் நேற்று முன்தினம் மாலை பெண்ணின் சடலம் மீட்கப்பட்டது.

பிரேத பரிசோதனைக்காக சடலம் மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# 22.5 இலட்சம் தொன் நிலக்கரியை கொள்வனவு செய்வதற்கு அனுமதி

கொழும்பு, மார்ச் 29

நுரைச்சோலை லக்விஜய நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்துக்கு 2023/2024 காலப் பகுதிக்கு தேவையான நிலக்கரி பெறுகைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

2023/2024 காலப்பகுதிக்கு நுரைச்சோலை லக்விஜய நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்திற்கு 22.5 இலட்சம் மெற்றிக் தொன் நிலக்கரி தேவையென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய, குறித்த பெறுகை செயன்முறையை நடைமுறைப்படுத்துவதற்காக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

(ஐ)

# காட்டுப்பகுதியில் வைத்து ஒருவர் கழுத்தறுத்து கொலை!

கொழும்பு, மார்ச் 29

காட்டுப்பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டு ஒருவர் கழுத்தறுத்துக் கொல்லப்பட்டார் என்ற அம்பாந்தோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அம்பாந்தோட்டை - புந்தல பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு கொல்லப்பட்டவர் அஷேன் காவிந்த குணசேகர (வயது 31) என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இறந்தவர் வேறொரு பிரதேசத்திலிருந்து புந்தல காட்டுப் பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அந்த இடத்தில் கூரிய ஆயுதத்தால் கழுத்தறுத்துக் கொலை செய்யப்பட்டார் என்று பொலிஸாரின் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் அம்பாந்தோட்டை தலைமையக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# ரணில் வீட்டுக்கு தீ வைத்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது!

கொழும்பு, மார்ச் 29

அறகலய போராட்ட சமயத்தில் மக்கள் கிளர்ச்சியின்போது கொள்ளுப்பிட்டியிலுள்ள தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டுக்கு தீ வைத்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவர் கோட்டை மாநகர சபையின் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் முன்னாள் உறுப்பினரான 50 வயது நபரே என்று குற்றப் புலனாய்வு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் தொடர்பில் தெரியவந்த தகவலுக்கு அமைய, சந்தேகநபர் நேற்று முன்தினம் இரவு அவரின் வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

# பிரியங்கா காந்தியின் தீவிர அணுகுமுறை காங்கிரசை கரை சேர்க்குமா?

அபினவ் கோயல்

“இந்த நாட்டின் பிரதமர் ஒரு கோழை, என் மீது வழக்குப் பதிவு செய்யுங்கள், என்னையும் சிறையில் தள்ளுங்கள்”

“தியாகியான தந்தையை அவமதித்தார்”

“என் தந்தையின் உடல் மூவர்ணக் கொடியால் போர்த்தப்பட்டு வந்தது”

“தியாகியின் மகனைத் துரோகி என்கிறீர்கள்.”

“ஜனநாயகத்திற்கு ரத்தம் ஊற்றி வளர்த்தது எனது குடும்பம்”

“தாய்க்கு அவமானம்”

“பணிய மாட்டேன், பின்வாங்க மாட்டேன், கொள்கைகளில் உறுதியாக இருப்பேன்”

கடந்த மூன்று நாட்களாக காங்கிரஸ் மூத்த தலைவர் பிரியங்கா காந்தி பேசியுள்ள சொற்கள் இவை. சகோதரனும், காங்கிரஸ் முக்கிய தலைவருமான ராகுல் காந்தியின் மக்களவை உறுப்பினர் பதவி ரத்து செய்யப்பட்ட பிறகு, பிரியங்கா காந்தி தீவிரமான அணுகுமுறையுடன் பேசுகிறார்.



மத்தியில் ஆட்சியில் இருக்கும் நரேந்திர மோடி அரசுக்கு பிரியங்கா காந்தி சவால் விடும் விதம் மற்றும் அவர் பேசும் வார்த்தைகளை பார்த்து அரசியல் நிபுணர்கள் பல அர்த்தங்களைக் கற்பிக்கின்றனர்.

பிரியங்கா காந்தியின் இந்த அவதாரம், சுழலில் சிக்கிய காங்கிரஸைக் கரைக்குக் கொண்டு வர உதவுவது மட்டுமின்றி, மீண்டும் ஒரு புதிய பயணத்திற்குத் தயார்படுத்தவும் உதவும் என்கின்றனர் நிபுணர்கள்.

பிரியங்கா காந்தியின் உண்மையான முகம் என்ன என்பதுதான் கேள்வி. இது அவருடைய 2.0 அவதாரமா? இக்கட்டான நேரத்தில் காங்கிரஸ் கட்சியை வழிநடத்த அவரால் முடியுமா? அவரால் முடிந்தால், சமாளித்தால், நாட்டின் அரசியலிலும், 2024 பொதுத் தேர்தலிலும் அதன் தாக்கம் என்னவாக இருக்கும்?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில் தெரிந்துகொள்ள, மூன்று அரசியல் நிபுணர்கள் மற்றும் மூத்த பத்திரிகையாளர்களிடம் பேசினோம்.

### பிரியங்காவிடம் என்ன சிறப்பு?

ஹேமந்த் அத்ரி, மூத்த பத்திரிகையாளர்:

“ராகுலுடன் ஒப்பிடும்போது பிரியங்கா மக்களுடன் உடனடியாகக் கலந்து விடுகிறார். ராகுல் காந்தி ஆங்கிலத்தில் சிந்தித்து மொழிபெயர்த்து இந்தியில் பேசுகிறார். பிரியங்கா காந்திக்கு இந்தியில் புரிந்து கொண்டு, இந்தியில் பேசுகிறார், இந்தியில் மட்டுமே சிந்திக்கிறார்.”

“நாட்டில் 48 சதவீத பெண் வாக்காளர்கள் உள்ளனர், பிரியங்காவுக்குப் பெண்கள் மற்றும் இளைஞர்களுடன் நல்ல தொடர்பு உள்ளது. ராகுல் காந்தியை பப்பு என்று பாஜக நிரூபித்துள்ளது, ஆனால் பிரியங்கா காந்தி மீது அப்படி எந்த வர்ணமும் பூசப் படவில்லை. எதிர்க்கட்சிகள் அவரைக் களங்கப்படுத்துவது கடினம். ப்ரியங்கா காந்தியை இந்திரா காந்தியின் பிம்பமாகப் பார்க்கிறார்கள்.”

“அவர் அன்பாகவும் பேசுகிறார். தேவைப்படும் போது கோபத்தையும் காட்டுகிறார். இது வழக்கமான இந்திரா காந்தி ஸ்டைல். நாட்டில் 30-40 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் இந்திரா காந்தியின் வடிவத்தை பிரியங்கா காந்தியில் பார்க்கிறார்கள்.”

### பிரியங்கா தேர்தலில் போட்டியிட வாய்ப்பு

‘ராகுல் காந்தி ஜெயிலுக்குப் போனாலும் சரி, போகாவிட்டாலும் சரி, பிரியங்கா தேர்தல் அரசியலுக்கு வந்துவிட்டார்.



கடந்த முறை தேர்தலில் போட்டியிட கட்சிக்கு உதவினார். ஆனால் இந்த முறை அவரே தேர்தலில் போட்டியிடலாம். ராகுல் காந்தியின் தண்டனை நிறுத்தி வைக்கப்படாவிட்டால், அவர் வயநாட்டில் போட்டியிடலாம்.”

‘ராகுல் காந்தியின் உறுப்பினர் பதவியை மீட்க முடிந்தால், அவர் 2024 இல் அமேதி அல்லது ரேபரேலியில் போட்டியிடுவார், ஏனென்றால் ஒட்டுமொத்த குடும்பமும் அரசியலில் இருந்து வெளியேற முடியாது. சோனியா காந்தி ஏற்கனவே ஓய்வு பற்றிப் பேசிவிட்டார். இப்போது அவருக்கு “செய் அல்லது செத்து மடி” என்ற நிலை தான் நிலவுகிறது.”

### “ப்ரியங்காவுக்கு கடினம்”

நீரஜா சௌத்ரி, மூத்த பத்திரிகையாளர்:

“இந்தியாவில் 65 சதவீத வாக்காளர்கள் 35 வயதிற்குட்பட்டவர்கள். குடும்ப அரசியலுக்கு எதிராக இந்த இளம் இந்தியாவில் எதிர்ப்பு உணர்வு உள்ளது, பிரியங்கா காந்தியை இந்தியா எவ்வாறு ஏற்றுக்கொள்கிறது என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.”

‘இன்றைய காலகட்டத்தில் காங்கிரஸின் போட்டியாளர்கள் மிகவும் பலமாக உள்ளனர். அரசு மிகவும் பலமாக உள்ளது. மிகப்பெரிய தேர்தல் எந்திரம் உள்ளது. ஏராளமான ஆதாரங்கள் உள்ளன. இத்தகைய சூழ்நிலையில் காங்கிரஸ் கட்சி பிரியங்கா காந்தியை எப்படி ஆதரிக்கிறது, அவர் எந்த அளவுக்கு வீதியில் இறங்கிக் களப்பணியாற்றுகிறார் என்பதைப் பார்த்துத் தான் ஒரு தெளிவான முடிவுக்கு வர முடியும்”

### ப்ரியங்காவின் இலக்கு

“உத்தரபிரதேச சட்டசபை தேர்தலில், பெண்களுக்குக் காங்கிரஸ் கட்சி முக்கியத்துவம் கொடுத்தது. பெண்கள் பெரிய ஓட்டு வங்கியாக உருவெடுத்து வருகின்றனர். இதை நரேந்திர மோதி புரிந்து கொண்டு லாபமடைந்துள்ளார்.”

“பிஹாரிலும் நிதிஷ்குமார் இந்த வாக்கு வங்கியைக் குறிவைத்து லாபமடைந்தார். பிரியங்கா காந்தியால் இந்த வாக்கு வங்கியைத் தன் பக்கம் இழுக்க முடியுமா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.”

“காங்கிரஸ் கட்சி சங்கடத்தில் உள்ளது, பிரியங்கா காந்தி வலுவாக உருவெடுத்தால், அது கட்சிக்கு நன்மை பயக்கும். தேசிய அளவில் மற்ற காங்கிரஸ் தலைவர்களை விட பிரியங்கா காந்தி மக்களுடன் மிகவும் சிறப்பாகத் தொடர்பு கொள்ள முடியும்.”

### ப்ரியங்கா மீதான நம்பிக்கை

விஜய் த்ரிவேதிவிஜய் த்ரிவேதி, மூத்த பத்திரிகையாளர்:

“நாட்டில் உள்ள மாநிலங்களின் தலைமைக்கு ராகுலை விட பிரியங்கா காந்தி மீது அதிக நம்பிக்கை உள்ளது. 3-4 ஆண்டுகளில் காங்கிரஸை விட்டு வெளியேறியவர்களில் பெரும்பாலோர் ராகுல் காந்தியால் வெளியேறினர், பிரியங்கா காந்தியால் யாரும் வெளியேறவில்லை. ஹிமாந்தா பிஸ்வா சர்மா அல்லது ஜோதிராதித்ய சிந்தியா அல்லது வேறு எந்த தலைவரானாலும் சரி, ராகுலுடன் ஏற்பட்ட பிணக்கினால் தான் விலகினர்.”

“இமாச்சலில் காங்கிரஸ் பிளவுபட்டது, அது பிரியங்கா காந்தியால் தீர்க்கப்பட்டுத் தேர்தலிலும் காங்கிரஸ் வெற்றி பெற்றது. ஹிமாச்சல் வெற்றியின் பெருமை பெரும்பாலும் ப்ரியங்காவையே சேரும்.”

“ராஜஸ்தானில் காங்கிரஸுக்கு இடையேயான உட்கட்சி மோதலை பிரியங்கா முடிவுக்குக் கொண்டு வர முடியும், மேலும் சத்தீஸ்கரில் பூபேஷ் பாகேலும் பிரியங்காவால் ஆதரிக்கப்பட்டவர், அதன் பிறகு அவர் அரசாங்கத்தை அமைத்தார்.”

“பிரியங்கா காந்தி தீவிர அரசியலுக்கு வந்ததில் இருந்து, அவர் ஆக்ரோஷமான அரசியலைத் தான் முன்னெடுத்து வருகிறார். லக்கிம்பூர் கேரி சம்பவத்தின் போது பிரியங்கா காந்திதான் முதலில் வந்தார்.”

“உ.பி. தேர்தலில் அகிலேஷ் யாதவ், மாயாவதி, ராகுல் காந்தி பற்றி அவ்வளவாகப் பேசப்படவில்லை. அங்கு பிரியங்கா காந்தி மட்டுமே தெரிந்தார். “பெண் தான். போராடமுடியும்” என கோஷம் போட்டார். அமைப்பின் பலவீனம் காரணமாக, சீட் கிடைக்காமல் போனது. ஆனால் அவர் தனியாளாகப் பலமாகப் போராடினார்.”

“நாட்டில் மாநிலங்களின் தலைமைப் பொறுப்பில் மல்லிகார்ஜின் கார்கே முக்கியப் பங்காற்றுகிறார். பிரியங்கா காந்தியால் களத்தில் இறங்கித் தலைமை தாங்க முடியும்.”

“பிரியங்கா காந்தி வந்து களத்தையே மாற்றி விடுவார் என்று நினைத்தால் அதுவே தோல்வி தான்”

“காங்கிரஸ் கட்சி வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிறது. அதை போர்ப்ஸ் பட்டியலில் கொண்டு வரலாம் என்று முயற்சிப்பது அறிவீனம். முதலில் அதை கீழ் நடுத்தர நிலைக்கும் பிறகு மேல் நடுத்தர நிலைக்கும் கொண்டு வர முயற்சிக்கலாம். காங்கிரஸ் 50 இடங்களைக் கைப்பற்றினாலே ப்ரியங்காவுக்கு வெற்றி என்று கொள்ளலாம்”. (பிபிசி)



# நிலைபேறான பொருளாதார முன்னேற்றமும் முறைமை மாற்றத்தை அடைதலும்



கலாநிதி ஜெகான் பெரேரா

முறைமை மாற்றத்துக்கான மக்களின் விருப்பத்தின் பிரமாண்டமான வெளிப் பாடாக தோன்றிய போராட்ட இயக்கத் துக்கு பிறகு ஒரு வருடம் கடந்துவிட்டது. இப்போது இடைக்கிடை வீதிகளில் காணக்கூடியதாக இருப்பவை தெற்கில் இருந்தும் வடக்கில் இருந்தும் வறியவர்களும் தனவந்தர்களுமாக அணிதிரண்டு தலைநகர் கொழும்பின் வீதிகளை மூன்று மாதங்களுக்கும் அதிகமான காலமாக ஆக்கிரமித்து நின்ற அந்த மாபெரும் மக்கள் சக்தியின் மங்கலான நகல்கள் மாத்திரமே.

மக்கள் மீண்டும் வீதிகளில் இறங்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் இடம் தருவதாக இல்லை. முன்னைய அரசாங்கத்தை விடவும் கூடுதலான அளவுக்கு அடங்குமுறை கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் அரசாங்கம் முன்னெடுத்து மக்கள் போராட்டங்களை ஒடுக்குகிறது.

மக்களை வீதிகளுக்கு கொண்டுவந்த உடனடிக் காரணிகளை அரசாங்கம் கவனத்தில் எடுத்து கையாண்டிருக்கிறது. வாகனங்களுக்கான எரிபொருட்கள் மற்றும் சமையல் எரிவாயுவை பெறுவதற்கு மக்கள் இரவுபகலாக கிலோ மிட்டர்கள் கணக்கான வரிசைகளில் நின்ற காட்சிகளை இப்போது காணமுடியவில்லை. இந்த அடிப்படை பாவனைப்பொருட்களின் விலைகள் மும்மடங்கு அதிகரித்த காரணத்தால் அவற்றுக்கான கிராக்கி கணிசமானளவுக்கு குறைந்திருக்கிறது. மக்கள் எதிர்நோக்குகின்ற பொருளாதார இடர்பாடுகளை பொய்யாக்குவதைப் போன்ற வழமைநிலை வெளித்தோற்றம் காணப்படுகிறது.

முன்னர் 300 ரூபாவாக இருந்த தனது மாதாந்த மின் கட்டணம் தற்போது 3200 ரூபாவாக உயர்ந்திருப்பதாக ஒரு முச்சக்கரவண்டி சாரதி புலம்புகிறார். குளிர்சாதனப்பெட்டியை பயன்படுத்துவது தனக்கு கட்டுப்படியாகவில்லை என்று அவர் கூறுகிறார். வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாமல் திணறிக்கொண்டிருக்கும் நிலையான வருமானம் பெறும் அரசாங்க ஊழியர்கள் தங்களது நகைகளை அடகு வைப்பதுடன் காணிகளையும் ஈடுவைக்கிறார்கள். வெளிநாடுகளுக்கு செல்லக்கூடியவர்கள் நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள்.

பாதுகாப்புத்துறையை உச்சபட்சத்துக்கு பயன்படுத்த தயாராக இருப்பதாக அரசாங்கமும் காட்டிக்கொள்கிறது. இதற்கு குறிப்பாக சமூகத்தின் மேல் வர்க்கத்தினர் மத்தியிலும் வறிய பிரிவினர் மத்தியில் இருக்கக்கூடிய சமூக விரோத கும்பல்கள் தங்களது வீடுகளை சூறையாடிவிடுவார்கள் என்று கவலைப்படும் சிறுபான்மைச் சமூகங்கள் மத்தியிலும் ஆதரவு இருக்கிறது.

ஜனாதிபதியாக வந்த பிறகு விக்கிரமசிங்க பொலிசாரை அனுப்பி போராட்ட இயக்கத்தை அடக்கி அதன் தலைவர்களையும் கைது செய்து தனது உறுதிப்பாட்டை வெளிக்காட்டினார். போராட்டங்கள் பொதுமக்களுக்கு இடையூறாக இருக்கக்கூடாது என்று அவற்றில் ஈடுபடுபவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

பொலிசாரின் அறிவுறுத்தல்களை மீறி போராட்டங்களில் ஈடுபடுவோர் மீது கண்ணீர்ப்புகை மற்றும் தடியடிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டு அவர்கள் கைது செய்யப்படுகிறார்கள். ஒரு வருடத்துக்கு முன்னர் போராட்ட இயக்கம் அதன் உச்சக்கட்டத்தில் இருந்தபோது காணப்பட்ட நிலைவரத்துக்கு முற்றிலும் மாறாக இப்போது மக்களின் எதிர்ப்பு உடனடியாகவே ஒடுக்கப்பட்டு விடுகிறது.

கூச்சலிட்ட ஒருவருக்கு நேர்ந்த துரதிர்ஷ்டவசமான கதியை உதாரணத்துக்கு எடுத்துக்கொள்ளலாம். மத வழிபாட்டுத்தலம் ஒன்றுக்கு அடிக்கல் நாட்டிக் கொண்டிருந்த ஒரு அமைச்சரைப் பார்த்து அந்த வழியால் தனது வாகனத்தில் சென்றுகொண்டிருந்த வர்த்தகர் ஒருவர் கூச்சலிட்டார். விரைந்து செயற்பட்ட பொலிசார் அவரை துரத்திச் சென்று கைதுசெய்தனர். மத வைபவம் ஒன்றுக்கு இடையூறு விழைவித்ததாக அவர் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளதாக ஊடகங்களில் பரவலாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

### சமூக உடன்பாடு

ஒரு வருடத்துக்கு முன்னர் இடம் பெற்றவற்றுக்கும் இப்போது இடம்பெறகின்றவற்றுக்கும் இடையாலான வேறுபாடு பிரகாசமாகத் தெரிகிறது. நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டுவந்த போக்கிரிகளை கைதுசெய்து அவர்கள் முறைகேடாக குவித்த செல்வத்தை மீட்டு நாட்டுக்கு கொண்டுவரவேண்டும் என்பதே அறகலய போராட்ட இயக்கத்தின் பிரதான முழக்கங்கள். பயங்கரவாத தடைச் சட்டத்தை பதிலீடு செய்வதற்காக அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு பல வழிகளில் பரந்தளவுக்கு சமூக மற்றும் அரசியல் வாழ்வை பாதிக்கக்கூடிய அளவுக்கு மேலும் கூடுதல் அடக்குமுறைத் தன்மை கொண்டதாக இருக்கிறது.



இந்த சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்படக்கூடிய ஒரு ‘ நபர்” ஒரு தனிநபராக, ஒரு சங்கமாக, ஒரு அமைப்பாக அல்லது பலர் சேர்ந்த ஒரு குழுவாக கருதப்படமுடியும் என்று அதன் 105 ஆம் பிரிவில் வரையறுக்கப்படுகிறது. ஜோர்ஜ் ஓர்வெல்லின் ‘1984” என்ற எதேச்சாதிகார அரசாங்கம் பற்றிய தலைசிறந்த நாவலை வாசித்தவர்கள் இந்த சட்டம் நிறைவேற்றப்பட்டால் அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்வது குறித்து நினைக்கும்போது பயத்தில் நடுங்குவார்கள்.

“முறைமை மாற்றம்” என்பது கடந்த வருடத்தைய போராட்ட இயக்கத்தின் முக்கியமான ஒரு கோரிக்கை. விரக்தியின் விளிம்பில் கிளம்பிய இந்த கோரிக்கையின் மையப்பொருள் நாட்டை வங்குரோத்து அடையச்செய்த அரசாங்கத்தை மாற்றுவதுடன் தங்களது தவறான ஆட்சிமுறை, ஊழல் மற்றும் மக்களின் துன்பங்கள் மீதான அலட்சியம் காரணமாக மக்களை வறுமைப்படுத்தியவர்களை பொறுப்புக் கூறவைத்து தண்டனை வழங்கவேண்டும் என்பதேயாகும். புதியதொரு ‘ சமூக உடன்பாட்டுக்கு” மக்கள் அழைப்பு விடுத்ததாகவும் முறைமைகள் மாற்றத்துக்கான அவர்களின் கோரிக்கையை அர்த்தப்படுத்தலாம்.

ஆட்சிசெய்பவர்களுக்கும் ஆளப்படுபவர்களுக்கும் இடையிலான சமூக உடன்பாடு என்ற கருத்துருவாக்கம் இங்கிலாந்தின் ஜோன் லொக், பிரான்சின் ஜீன் ஜக்க்குவெஸ் ரூசோ போன்ற அறிவொளியுக சிந்தனையாளர்களினால் நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னர் செய்யப்பட்டதாகும். ரூசோ 1762 ஆம் ஆண்டில் எழுதிய நூலுக்கு “Social Contract” என்று பெயரிட்டார்.

மக்கள் அரசாங்கம் இல்லாத இயற்கை நிலை ‘ தனிமையானது, அவலம் நிறைந்தது, கொடூரமானது” என்று அதில் இருந்து வெளியேறினார்கள். தங்களை ஆளக்கூடியவர்களுடன் மக்கள் சமூக உடன்பாடு ஒன்றில் பிரவேசித்த்ர்கள். சமூக உடன்பாட்டின் பிரகாரம் அரசாங்கத்தினால் வழங்கப்படும் பாதுகாப்பு மற்றும் ஒழுங்குமுறைக்கு பிரதியுபகாரமாக மக்கள் தங்களது உரிமைகள், சுதந்திரங்களில் சிலவற்றை கைவிட்டார்கள்.

நவீன ஜனநாயகங்களில் மக்கள் அரசாங்கத்தை அமைத்து தங்களது நலன்களை சிறப்பாக கவனித்துக் கொள்ளக் கூடிய பிரதிநிதிகளை தெரிவுசெய்கிறார்கள். ஆனால், 2022 மார்ச்சில் தங்களது அரசாங்கம் சமூக உடன்பாட்டுக்கு ஏற்ற முறையில் செயற்படவில்லை என்று உணர்ந்து அதை பதவி விலகுமாறும் முறைகேடாக குவித்த செல்வத்தை திருப்பித்தருமாறும் கோரினார்கள்.

### முறைமைகள் சீர்குலைவு

தொடர்ந்தும் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுபவர்கள் தேர்தல்களை நடத்தக் கோருவதுடன் களவாடப்பட்ட பணத்தை மீட்டுக்கொண்டுவர ஏன் அரசாங்கம் முயற்சிகளை எடுக்கவில்லை என்று கேட்கிறார்கள். முன்னைய அரசாங்கத்தில் பொறுப்புவாய்ந்த தலைவர்களாக இருந்த பலர் தற்போதும் நேரடியாக அல்லது திரைக்குப் பின்னால் அதிகாரப் பதவிகளில் தொடர்ந்தும் இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. ஊழல் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் தொடர்பான குற்றச்சாட்டுகளும் தொடருகின்றன.

கண்காணிப்பு குழுக்களுக்கு நியமிக்கப்பட்ட இரு அரசாங்க அமைச்சர்கள் இராஜினாமா செய்திருக்கிறார்கள். தங்களுக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பைச் செயற்படுத்துவதற்கு தேவையான தகவல்கள் தங்களுக்கு கிடைக்கவில்லை என்று அவர்கள் முறையிட்டிருந்தார்கள்.

2022 முற்பகுதியில் நாட்டை நடுத்தர வருமானமுடைய நாடு என்ற நிலையில் இருந்து குறைந்த வருமானமுடைய நாடாக தாழ்த்திய அரசாங்கத்தின் பாரிய தவறுகளை இலங்கை இன்னமும் உரிய முறையில் கவனித்து நடவடிக்கைகளை எடுக்கவில்லை. வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு முறைமை மாற்றத்தைக் கோரிய மக்கள் அரசாங்கம் பதவியில் இருந்து இறங்கவேண்டும் என்று கோரினார்கள். ஆனால் அது நடக்கவில்லை. பதிலாக அரசாங்கம் தன்னை மாற்றியமைத்துக்கொண்டு மீண்டும் அதிகாரத்தில் தொடருகிறது.

வீட்டுக்கு செல்லவேண்டும் என்று தாங்கள் விரும்பிய அரசாங்கம் ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் தலைமத்துவத்தின் கீழ் மேலும் பலம்பொருந்தியதாக வளர்ந்து முறைமை மாற்றத்துக்கான கோரிக்கையை அலட்சியம் செய்வது போராட்ட இயக்கத்தவர்களை சீற்றமடைய வைத்திருக்கிறது. உள்ளூராட்சி தேர்தல்களை நடத்தும் முயற்சிகளுக்கும் அரசாங்கம் இடையூறு செய்துகொண்டிருக்கிறது.

இணையத்தின் மூலமாக ஹார்வார்ட் பல்கலைக்கழக மாணவர்களுக்கு கடந்த வாரம் உரையாற்றிய ஜனாதிபதி விக்கிரமசிங்க தேர்தல்கள் தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்தை அரசாங்கம் மதித்துச் செயற்படும் என்று கூறினார். அரசாங்கத்தின் மூன்று கிளைகளுக்கும் இடையிலான முரண்பாடு ஒரு வருடத்துக்கு முன்னர் மக்கள் கோரிய முறைமை மாற்றத்துக்கு பதிலாக ‘முறைமை சீர்குலைவை’ கொண்டுவரக்கூடிய அறிகுறிகளைக் காட்டுகின்றது.

தெற்காசியாவிலேயே மிகவும் சிறந்த ஊழல் தடுப்பு சட்டத்தை விரைவில் பாராளுமன்றத்துக்கு கொண்டுவந்து நிறைவேற்றுவதற்கு தனது அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று ஜனாதிபதி பெருமையுடன் அறிவித்திருக்கிறார். நிலைபேறான அரசியல் உறுதிப்பாடு மற்றும் பொருளாதார மீட்சிக்கான ஜனாதிபதியின் நோக்கு ஓர்வெல்லின் ‘1984 ‘நாவலில் காணப்பட்டதைப் போன்று மக்களுக்கு அநீதியையும் அவலங்களையும் கொண்டுவரக்கூடியதாக அமையாமல் உண்மையான ஒரு முறைமை மாற்றமாக - எதிரணி கட்சிகளுடனும் சிவில் சமூகத்துடனும் ஆலோசனை கலந்து தயாரிக்கப்படும் எதிர்காலத்துக்கான ஒரு திட்டமாகவும் புதியதொரு ‘ சமூக உடன்பாடாகவும்” அமைய வேண்டியது அவசியம். அதில்தேர்தல்கள் முதற்படியாக இருக்க வேண்டும். ●

# ஊழலுக்கு எதிரான சட்டம் அவசியம்!

## இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய



கொழும்பு, மார்ச் 29

ஊழலுக்கு எதிரான சட்டத்தை பாராளுமன்றத்தில் கொண்டுவர வேண்டியது அவசியம் என்று இராஜாங்க அமைச்சர் தராக்க பாலசூரிய தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்துள்ள அவர்,

“சர்வதேச நாணய நிதியத்தினூடாக முதல் கட்டமாக 330 மில்லியன் டொலரை பெற்றுக் கொண்டுள்ளோம். இதனை அடிப்படையாக வைத்து தற்போது புதிய அலையை உருவாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சில தொழிற்சங்கங்கள் தனியார்மயமாக்கலுக்கு எதிராக கருத்துக்களை கூறி வருகின்றன. ஒரு வருடம் இலாபம் சம்பாதித்தாலும் மக்களின் வரிப் பணத்தில் அந்த நிறுவனங்களை நீண்ட காலம் பராமரிக்க வேண்டும்.

சில தொழிற்சங்கங்கள் தனியார்மயப்படுத்தலுக்கு எதிராக கருத்துக்களை முன்வைத்து வருகின்றன. குறித்த நிறுவனங்கள் தற்போது இலாபத்தை ஈட்டுகின்றன என்பதற்காக இலாபத்தை மட்டும் அடிப்படையாக வைத்து தீர்மானம் எடுக்க முடியுமா என்றே நாம் அவர்களிடம் கேட்கின்றோம்.

ஒரு வருடம் குறித்த நிறுவனங்கள் இலாபத்தை ஈட்டி இருந்தாலும் நீண்டகலமாக மக்களின் வரிப்பணத்திலேயே அந்த நிறுவனங்களை நடத்தி செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து குறுகிய தொகை நிதி கிடைத்திருந்தாலும் அது நாட்டின் பிரச்னைக்கான தீர்வாக அமையாது. தீர்வுக் கான ஒரு வழியாகவே அதனை நாம் கருத்திற்கொள்ள வேண்டும்.

பிரச்னைகளுக்கான தீர்வு எம்மிடம் மட்டுமே உள்ளது. எனவே, பொருளாதார சீர்திருத்தம் என்பது அவசியமாகின்றது.

பொருளாதாரத்தை மறுசீரமைக்காவிட்டால் நெருக்கடிக்குள்ளேயே மீண்டும் பயணிக்க நேரிடும். சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடனை பெற்றுக்கொள்வதனூடாக நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியாது என்று சிலர் கூறுகின்றனர்.

நாம் இந்த சந்தர்ப்பத்தில் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடனை பெற்றுக்கொள்ளாவிட்டால் சுவாசிப்பதற்கான சந்தர்ப்பம்கூட இல்லாமல் போகும். நாம் அந்த கடனை பெற்று கடனை மறுசீரமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அது மட்டுமல்லாது புதிய முதலீடுகளை மேற்கொள்ள முடியும். ஊழலை ஒழிப்பதன் மூலம் நாட்டை நிரந்தர அபிவிருத்தியை நோக்கி நகர்த்தும் திறன் காணப்படுகின்றது. அதற்காக தற்போதைய அரசாங்கம் கொண்டுவரும் கொள்கைகளால் பணிகளை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியும்.

நாட்டில் இன்று ஓரளவு ஸ்திரத்தன்மை ஏற்பட்டுள்ளது. சுற்றுலாத்துறையில் ஓரளவு வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. அந்நியச் செலாவணி கையிருப்பு அதிகரித்து வருகிறது.

மேலும் வெளிநாடுகளுக்கு தொழில்வாய்ப்பு பெற்றுச் செல்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. எனவே, எதிர்காலத்தில் அதிக கையிருப்பு பெறும் திறன் எங்களிடம் உள்ளது.

ஊழலுக்கு எதிரான சட்டத்தை விரைவில் பாராளுமன்றத்தில் கொண்டு வர வேண்டும். ஊழலை ஒழித்தால் தான் நிரந்தர வளர்ச்சியை நோக்கி பயணிக்க முடியும்.

அதேபோன்று பொருளாதாரத்தை மறுசீரமைப்பது போன்று அரசியல் சீர்திருத்தமும் அவசியமாகும்” - என்றார். (அ-கே)

# எதிர்காலத்தில் மக்களுக்கு நிவாரணங்கள் கிடைக்கும்!

## ரோஹித அபேவர்த்தன எம். பி.

கொழும்பு, மார்ச் 29

நாட்டில் தற்போது ஓரளவேனும் ஸ்திரத்தன்மை ஏற்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் எதிர்காலத்தில் எரிபொருள் விலை, மின் கட்டணம் குறைந்தால் மக்களுக்கு மேலும் நிவாரணங்களை வழங்கக்கூடிய சூழல் உருவாகும் என்று பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

மேலும்,

“உள்ளூராட்சிமன்ற தேர்தல் தொடர்பில் முரணான கருத்துக்களை பரப்பி வருகின்றனர். எனினும் கட்சி என்ற முறையில் உள்ளூராட்சி மன்ற தேர்தலை எதிர்கொள்வ தற்கு நாம் தயாராகவே இருக்கின்றோம்.

மக்கள் பிரதிநிதிகளால் நிர்வகிக்கப்படும் மன்றங்களாக உள்ளூராட்சிமன்றங்கள் காணப்படுகின்றன. எனவே, மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கு தேர்தலொன்று வைக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

எனினும், நாடு ஸ்திரத்தன்மையை அடைந்த பின்பு தேர்தலுக்கு செல்வதே பொறுத்தமானதாக அமையும். ஆளுங் கட்சிமீது எதிர்க் கட்சிகள் விமர்சனங்களை முன்வைக்கின்றன. ஆளுங்கட்சி என்ற முறையில் தேர்தலை ஒத்திவைப்பதற்கு நாமே நடவடிக்கைகளை மேற்கொண்டதாகக் கூறினார்கள். தேர்தலை ஒத்திவைக்கும் தேவை எமக்கு கிடையாது.

எமது கட்சியின் தலைவர் மகிந்த ராஜபக்ஷ உரிய காலத்தில் தேர்தலை நடத்திய தலைவராவார். ஜனநாயகத்துக்கு மதிப்பளிக்கும் தரப்பினர் நாம். நாட்டில் தற்போது ஓரளவு ஸ்திரத்தன்மை ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதி கூறியதைபோன்று வட்டி வீதம் குறைக்கப்பட்டால் நாட்டு மக்களுக்கு நல்லதொரு நிலையை உருவாக்க முடியும் - என்றார். (அ-கே)






# அரசு தந்த காணிகளிலிருந்து வெளியேறுமாறு அச்சுறுத்தல்!

## வன வளத் திணைக்களம் விடுப்பதாக சாடல்

மட்டக்களப்பு, மார்ச் 29

**'இளம் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் தேசிய வேலைத்திட்டத்தின்' கீழ் காணிகளை பகிர்ந்தளிக்கும் அரசாங்கத்தின் திட்டத்தில் முள்ளிவட்டவான், வாகனேரி, கிரான் பிரதேசங்களில் காணிகளை பெற்றவர்களை அங்கிருந்து வெளியேறுமாறு வன வளத் திணைக்களத்தினர் அச்சுறுத்துகின்றனர் என்று பயனாளிகள் தெரிவித்தனர்.**




இந்த விடயம் தொடர்பாக கிழக்கு ஊடக மன்றத்தின் ஏற்பாட்டில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பில் பயனாளிகள் கருத்து வெளியிடுகையில்,

2020 ஆண்டில் ஆட்சி புரிந்த ஜனாதிபதியின் திட்டத்தின்படி பயிர் செய்கைக்காக காணி கேட்டு விண்ணப்பித்திருந்தோம். இதன்படி 2022.06.16ஆம் திகதி முள்ளிவட்டவான் கிராமத்தில் அரை ஏக்கர் அளவில் 17 பயனாளிகளுக்கு கோறளைப்பற்று தெற்று கிரான் பிரதேச செயலாளர் மற்றும் செயலக காணி அதிகாரிகளும் நேரடியாக வருகை தந்து காணியை பகிர்ந்தளித்தனர். அதற்கான ஆவணங்களும் அளிக்கப்பட்டன.

இதனை துப்பரவு செய்து பயிர் செய்கை நடவடிக்கையில் ஈடுபடும் போது வனவளத் திணைக்கள அதிகாரிகள் குறித்த இடத்துக்கு வருகை தந்து தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில் எந்தவொரு பயிர்செய்கை நடவடிக்கையும் மேற்கொள்ள வேண்டாம் என கூறுவதோடு சிலரை கைது செய்து சட்ட நடவடிக்கையும் எடுத்து வருகின்றனர். ஏனைய இடங்களில் அடையாளமிடப்பட்டது போன்று எங்களுக்கு வழங்கப்பட்ட இடத்தில் எந்தவிதமான அளவைக் கல்லும் இடப்படவில்லை.

ஏழை மக்களான நாங்கள் கஷ்டப்பட்டு உழைத்த பணத்தை பயிர்செய்கை நடவடிக்கைக்கு செலவு செய்துள்ளோம். தற்போது பலனின்றி போகும் நிலையில் உள்ளது. எந்த அதிகாரியின் கதையை கேட்பது என்று புரியாமல் உள்ளது.

இந்த விடயம் தொடர்பாக காணி வழங்கிய பிரதேச செயலக நிர்வாகத்திடம் நிலைமை தொடர்பாக தெரிவித்தபோதும் அவர்கள் பாராமுகமாக இருப்பது கவலையளிக்கிறது.

இரு தரப்பு அரச திணைக்கள நிர்வாகச் சிக்கலில் நாங்கள் அகப்பட்டுள்ளோம். எனவே, இது விடயத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் தலையிட்டு எமக்கு சாதகமான பதில் ஒன்றைப் பெற்றுத்தருமாறு கோருகிறோம் - என்று கூறினர்.

(ஐ)

# சிறுபோக நெல்செய்கைக்கான உர விநியோகம் ஆரம்பமானது!




அக்கரைப்பற்று, மார்ச்

2023 சிறுபோக நெல் செய்கைக்கான ரீ.எஸ்.பி உரம் கமநல சேவை மத்திய நிலையங்களினூடாக விநியோகிக்கப்பட்டு வருவதாக, அம்பாறை - பாலமுனை கமநல சேவை மத்திய நிலையத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ. எல். அஷ்ரப் தெரிவித்தார்.

பாலமுனை கமநல சேவை மத்திய நிலைய பிரிவுக்குட்பட்ட விவசாய அமைப்புகளுக்கு கையளிக்கும் வைபவம், பாலமுனை உர களஞ்சிய சாலையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

விவசாய அமைப்புகளினூடாக விவசாயிகளுக்கு ஓர் ஏக்கருக்கு 22 கிலோகிராம் ரீ. எஸ். பி உரம் விநியோகிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கு அமைய, கமத்தொழில் அமைச்சால் நாடு தழுவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இலவச ரீ. எஸ். பி உர விநியோகம், அம்பாறை மாவட்டத்தில் சகல கமநல மத்திய நிலையங்களினூடாக விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

நீண்ட காலத்துக் பின்னர் அரசாங்கத்தால் ரீ. எஸ் .பி உரம் வழங்கப்படுவதாகவும் விவசாயிகள் தத்தமது விவசாய அமைப்புகளினூடாக ரீ.எஸ்.பி.உரத்தைப் பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுள்ளார்.

இம்முறை சிறுபோகத்தில் அம்பாறை மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 35 ஆயிரம் ஏக்கரில் நெற்செய்கை இடம்பெறவுள்ளது.

(ஐ)

# விபுலானந்தரின் ஆளுமை இன்றும் வழிநடத்துகிறது

## கிழக்கு பல்கலை துணைவேந்தர்



காரைதீவு, மார்ச் 29

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் இன, மத பேதமற்ற பல் பரிமாண ஆளுமை கொண்ட ஒரு பெருமகான். இவர் நமக்கெல்லாம் ஒரு சிறந்த தலைமைத்துவ வழிகாட்டி - இவ்வாறு காரைதீவில் நடைபெற்ற அடிகளாரின் 131ஆவது ஜனனதின விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் தெரிவித்தார்.

காரைதீவு சுவாமி விபுலாநந்த ஞாபகார்த்த பணிமன்றமும் அவுஸ்திரேலிய காரைதீவு மக்கள் ஒன்றியமும் இணைந்து நடத்திய சுவாமி விபுலாநந்தரின் 131வது ஜனனதின விழா திங்கட்கிழமை அவர் பிறந்த காரைதீவு மண்ணில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

முதன்மை அதிதியாக இலங்கை கிழக்குப்பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் கலந்து சிறப்பித்தார். நினைவுப்பேருரையை தென்கிழக்கு பல்கலைக்கழக தமிழ்மொழித்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கி .இரகுவரன் நிகழ்த்தினார்.

காரைதீவு சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த்த மணிமண்டபத்தில் பணிமன்றத்தலைவர் வெ. ஜெயநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு திருமுன்னிலை அதிதியாக மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் சிறீமத் சுவாமி நீலமாதவானந்தஜீ மஹராஜ் கலந்து ஆசி வழங்கினார்.

இங்கு உரையாற்றிய துணைவேந்தர் மேலும் தெரிவிக்கையில்,

சுவாமிகள் பல ஆளுமை மிக்க சிறந்த பண்புகளை கொண்டிருந்தார்கள். சமயவாதியாக, சமூகவாதியாக திகழ்ந்த அவர் தரமான சிறந்த கல்வியலாளராக பரிணமித்திருந்தார் .

அவர் நேர முகாமைத்துவத்தை மிகவும் இறுக்கமாக பின்பற்றியவர். ஒரு தடவை அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் ஆய்வுக்கு சென்ற குழுவினர் அவரை அழைத்தபோது சரியாக 12 மணிக்கு எனது பாடம் முடியும். 12 ஒன்றுக்கு சந்திக்கிறேன் என்று சொல்லி பாடம் எடுத்து சரியாக 12.01 இல் சந்தித்தார் என்று பதிவு கூறுகிறது.

இராமகிருஷ்ண மிஷன் ஒரு துறவியை அண்ணாமலை பல்கலைக்கழகத்துக்கு பேராசிரியராக விடுவித்தது என்பது சுவாமி விபுலானந்தர் ஒருவரைத்தான். அதுவே, முதலும் கடைசியும் என்று கூறப்பட்டிருக்கின்றது. அத்தனை மேதாவிலாசம் கொண்டவர். இந்த காரைதீவு கிராமத்தில் பிறந்து அகில உலகத்தையே தன் பக்கம் ஈர்த்து சாதனைவீரராக திகழ்ந்தார்.

அவரால் காரைதீவு மட்டுமல்ல கிழக்கு மட்டுமல்ல தமிழினம் மட்டுமல்ல முழு தமிழ் கூறு நல்லுலகமே பெருமை கொள்கிறது.

அவரை இன்னும் ஆய்வு செய்ய வேண்டும் - என்றார்.

(ஐ-10)

# புலம்பெயர்ந்தவர்களின் உதவியில் வீட்டுத் திட்டம்!



திருக்கோவில், மார்ச் 29

திருக்கோவில் - 4 மண்டானை கிராமத்தில் வீடற்ற நிலையில் வாழ்ந்து வந்த 25 குடும்பங்களுக்கு புதிய வீடுகளை நிர்மாணிக்க அடிகல் நாட்டப்பட்டது.

இந்நிகழ்வானது திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ. கஜேந்திரன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

கனடாவில் வாழும் கொழும்பு மொறட்டுவை பல்கலைக்கழக பழைய மாணவர்களின் நிதிப் பங்களிப்பில் நடைபெறும் இந்தத் திட்டத்தில் முதல் கட்டமாக 5 வீடுகளை நிர்மாணிக்க அடிக்கல் நாட்டப்பட்டது.

நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் கே. சதிசேகரன், கிராம சேவை நிர்வாக உத்தியோகத்தர் ஏ.கந்தசாமி, நிதி அனுசரணையாளரான பாபினி கிரிதரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(ஐ)

# ஆசிரியர் பற்றாக்குறைக்கு விரைவில் தீர்வு எட்டப்படும்

மட்டக்களப்பு, மார்ச் 29

மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறைக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்று இராஜாங்க அமைச்சர் சி. சந்திரகாந்தன் உறுதியளித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலவும் ஆசிரியர்கள் பற்றாக்குறை தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது மாவட்டத்தில் உள்ள கல்வி வலயங்களில் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பாதகமாகக் காணப்படும் கணித, விஞ்ஞான ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டன. அத்துடன், கல்வித் துறை சார் திணைக்கள அதிகாரிகளிடம் விடயம் தொடர்பாக கேட்டறிந்து கொண்ட இராஜாங்க அமைச்சர், கல்வி அமைச்சின் ஊடாக இந்தப் பிரச்னைக்கான தீர்வை விரைவாக பெற்றுத் தருவதாகவும் உறுதியளித்தார்.

# 3 ஆண்டுகளில் 1,600 பீரங்கிகளை தயாரிக்க ரஷ்யா இரகசிய திட்டம்



மொஸ்கோ, மார்ச் 29

உக்ரைனுடனான ரஷ்யாவின் போரானது நீட்டிக்கப்பட்டு வரும் சூழலில், இதற்கு ஆயுதம் வழங்கும் நடவடிக்கைகளுக்கு மேற்கத்திய நாடுகளே காரணம் என ரஷ்யா குற்றச்சாட்டு தெரிவித்து வருகிறது.

இந்நிலையில், ரஷ்ய ஆதரவு செய்தி ஊடகங்களில் ஒன்றான நொவோஸ்தி வெளியிட்ட செய்தி ஒன்றில், புடின் கூறும் போது, யுக்ரைனுக்கு எதிரான போருக்கு 420 அல்லது 440 பீரங்கிகளையும், அதே அளவிலான வெடிபொருட்களையும் அனுப்ப திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த காலகட்டத்தில், தற்போது எங்கள் வசமுள்ள 1,600க்கும் மேற்பட்ட பீரங்கிகளை விட புதிய மற்றும் நவீனத்துவம் வாய்ந்த பீரங்கிகளை நாங்கள் உற்பத்தி செய்வோம்.

உக்ரைனின் ஆயுத படையில் உள்ள பீரங்கிகளின் எண்ணிக்கையை விட ரஷ்ய இராணுவத்தின் மொத்த பீரங்கி எண்ணிக்கை 3 மடங்கு கூடுதலாக இருக்கும்.

விமான படையை பற்றி கூற வேண்டியதில்லை. இந்த வேற்றுமையானது 10 மடங்காக இருக்கும் என அவர் கூறியுள்ளார்.

நாள் ஒன்றுக்கு உக்ரைன் இராணுவம் 15 பீரங்கி குண்டுகளை பயன்படுத்துகிறது.

அமெரிக்கா மாதம் ஒன்றுக்கு தோராய அடிப்படையில், 15 ஆயிரம் பீரங்கி குண்டுகளை உற்பத்தி செய்கிறது.

உதவிகள் என்ற பெயரில் உக்ரைனுக்கு மேற்கத்திய நட்பு நாடுகள் இராணுவ தளபாடங்களை அனுப்பி வருவது என்பது, இந்த போரை நீட்டிக்க செய்வதற்கான ஒரு முயற்சியே.

அது மிக பெரிய சோகத்திலேயே சென்று முடியும்.

வேறு ஒன்றும் இருக்காது என்பது எனது கருத்து என்று புடின் கூறியுள்ளார். (அ)

# அமெ. ஆரம்ப பாடசாலையில் இளம்பெண் துப்பாக்கிச் சூடு!

## 3 குழந்தைகள் உள்ளிட்ட 6 பேர் பலி!!

நியூயோர்க், மார்ச் 29

**அமெரிக்காவில் ஆரம்பப் பாடசாலை ஒன்றில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 3 குழந்தைகள் உட்பட 6 பேர் பலியாகியுள்ளனர்.**

டென்னிசி மாகாணத்தின் தலைநகரான நாஷ்வில்லில் உள்ள ஆரம்பப் பாடசாலையில் பெண் ஒருவர் கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார். இதில் 3 குழந்தைகள் உட்பட 6 பேர் பரிதாபமாக கொல்லப்பட்டனர். 3 குழந்தைகள் தவிர பாடசாலை ஊழியர்கள் 3 பேரும் உயிரிழந்ததை நாஷ்வில் நகர காவல்துறை உறுதிப்படுத்தியுள்ளது.

ஒன்பது வயதுடைய மூன்று குழந்தைகளுக்கும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் இருந்தன. அவர்கள் வாண்டர்பில்ட்டில் உள்ள மன்றோ கேரல் ஜூனியர் குழந்தைகள் மருத்துவமனைக்கு வந்தவுடன் இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டனர். அதிகாரிகளின் கூற்றுப்படி, பாதிக்கப்பட்டவர்கள் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள். பள்ளியில் அவர்களின் பங்கு உடனடியாகத் தெரியவில்லை.

கடந்த திங்கட்கிழமை பிற்பகல் மெட்ரோபொலிட்டன் நாஷ்வில்லி காவல் துறை, சந்தேக நபர், 28 வயதான நாஷ்வில்லே குடியிருப்பாளரான ஆட்ரி ஹேல் என்ற பெண் சுட்டுக்கொல்லப்பட்டதாக அறிவித்தது.



ஹேல் ஒரு தாக்குதல் துப்பாக்கி, கைத்துப்பாக்கி ஆகிய வற்றை வைத்திருந்ததாகவும், ஒரு கதவு வழியாக சுட்டு கட்டடத்திற்குள் நுழைந்ததாகவும் போலீசார் தெரிவித்தனர். அவரிடம் பாடசாலைகளின் விரிவான வரைபடங்களும் இருந்துள்ளன.

ஹேல் பள்ளியின் முன்னாள் மாணவர் என்று நம்பப்படுவதாக போலீசார் தெரிவித்தனர். போலீஸ் தலைவர் ஜான் டிரேக் செய்தியாளர்களிடம் கூறுகையில், ஹேல் "திருநங்கையாக அடையாளம் காட்டுகிறார்".

திங்கட்கிழமை நிலவரப்படி, இந்த ஆண்டு இதுவரை அமெரிக்காவில் குறைந்தது 128 வெகுஜன துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் நடந்துள்ளன, துப்பாக்கி வன்முறைக் காப்பகத்தின் கூற்றுப்படி, நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட பாதிக்கப்பட்டவர்கள் சம்பந்தப்பட்ட ஒரு சம்பவத்தை வெகுஜன துப்பாக்கிச் சூடு என்று வரையறுக்கிறது.

2020 ஆம் ஆண்டு முதல், துப்பாக்கி வன்முறைக் காப்பக தரவுத்தளத்தின்படி, அமெரிக்காவில் ஒவ்வொரு ஆண்டும் வெகுஜன துப்பாக்கிச் சூடு சம்பவங்களின் எண்ணிக்கை 600க்கு மேல் உயர்ந்துள்ளது.2022 இல் 646 பதிவு செய்யப்பட்டுள்ளது. (அ)

## "இம்ரான்கான் கொல்லப்படுவார்"

# பாக். உள்துறை அமைச்சரின் கருத்தால் பரபரப்பு

இஸ்லாமாபாத், மார்ச் 29

பாகிஸ்தானின் உள்துறை இராணுவ அமைச்சர் ராணா சனாவுல்லா தனியார் தொலைக் காட்சிக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் இம்ரான்கான் குறித்த அவர் தெரிவித்த கருத்து பாகிஸ்தான் அரசியலில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

நம்பிக்கையில்லா பிரேரணை மூலம் பிரதமர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட முன்னாள் பிரதமர் இம்ரான்கான், தற்போதைய பிரதமர் ஷபாஸ் ஷெரீப்பின் அரசுக்கு எதிராகவும், பாராளுமன்ற தேர்தலை முன்கூட்டியே நடத்தவும் வலியுறுத்தி போராட்டங்களை நடத்தி வருகிறார்.

இந்நிலையில், கடந்த ஆண்டு நவம்பர் மாதம் பஞ்சாப் மாகாணத்தில் நடைபெற்ற பேரணியில் பங்கேற்றபோது இம்ரான் கான் மீது துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது. இதில் அவர் காயங்களுடன் உயிர் தப்பினார். அதை தொடர்ந்து, பிரதமர் ஷபாஸ் ஷெரீப்பும், உள்துறை இராணுவ அமைச்சர் ராணா சனாவுல்லா ஆகிய இருவரும் பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. உதவியுடன் தன்னை கொலை செய்ய சதி திட்டம் தீட்டியதாக குற்றம் சாட்டி வருகிறார்.

இந்த நிலையில் தனியார் தொலைக்காட்சிக்கு பேட்டி அளித்த ராணா சனாவுல்லா பேசும்போது, "பாகிஸ்தானின் ஆளும் கட்சிக்கு எதிரியாக இம்ரான்கான் இருக்கிறார். முன்னாள் பிரதமர் இம்ரான்கான் பாகிஸ்தானின் அரசியலைக் கொண்டு சென்றிருக்கும் பாதையால் ஒன்று அவர் கொல்லப்படுவார் அல்லது நாங்கள் கொல்லப்படுவோம். இம்ரான்கான் அரசியலை பகையாக மாற்றி இருக்கிறார். அவர் எங்கள் எதிரி. அவ்வாறே அவர் நடத்தப்படுவார்" என்றார். (அ)



# பெஞ்சமின் நெத்தின்யாஹூவின் நீதித்துறை சீர்திருத்ததுக்கு எதிர்ப்பு!

டெல் அவிவ், மார்ச் 29

இஸ்ரேலிய நீதித்துறையில் பிரதமர் பெஞ்சமின் நெத்தின் யாஹூ மேற்கொள்ள தீர்மானித்திருக்கும் சர்ச்சைக்குரிய நீதித்துறை சீர்திருத்தங்களுக்கு மக்கள் எதிர்ப்பினை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இஸ்ரேலின் நீதித்துறை கட்டமைப்பில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் காரணமாக இராணுவத்திற்கு அபரிமிதமான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளமைக்கு நாடளாவிய ரீதியாக சீற்றத்துடன் மக்கள் எதிர்ப்பினை வெளிப்படுத்தி வருகின்றனர்.

பிரதமர் பெஞ்சமின் நெத்தின் யாஹூ தமது பாதுகாப்பு அமைச்சரை பதவியில் இருந்து நீக்கியிருந்தார்.

இதனையடுத்து ஆயிரக்கணக்கான மக்கள் வீதி போராட்டங்களில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

ஜெருசலத்தில் உள்ள இஸ்ரேலிய பிரதமரது இல்லத்திற்கு முன்னால் கூடியுள்ள ஆயிரக்கணக்கானவர்களை கலைக்க இராணுவமும் காவல்துறையும் இணைந்து நீர்த்தாரை பிரயோகத்தை மேற்கொண்டனர்.

டெல் அவிவ் சர்வதேச விமான நிலைய ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டதை அடுத்து விமான போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதியரசர்களை நியமிப்பது முதல் நீதித்துறை நடவடிக்கைகள் அவரது நேரடி கண்காணிப்பின் கீழ் கொண்டு வருவதற்கான செயல்பாட்டில் பெஞ்சமின் நெத்தின்யாஹூ சர்வாதிகார முறையில் செயல்படுவதாக மக்கள் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

# கடலில் ரஷ்யா சுப்பர்சோனிக் எதிர்ப்பு ஏவுகணை சோதனை!

மொஸ்கோ, மார்ச் 29

ஜப்பான் கடலில் உள்ள போலி இலக்கை நோக்கி ரஷ்ய கடற்படை, சுப்பர்சோனிக் எதிர்ப்பு ஏவுகணைகளை சோதனை செய்ததாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

100 கி.மீ. (62 மைல்) தொலைவில் உள்ள உருவகப்படுத்தப்பட்ட எதிரி போர்க்கப்பலின் மீது இரண்டு கப்பல்கள் ஏவுகணைத் தாக்குதலை நடத்தியதாக அமைச்சகம் கூறியுள்ளது.

இரண்டு மாஸ்கிட் சுப்பர்சோனிக் க்ரூஸ் ஏவுகணைகள், வழக்கமான மற்றும் அணு ஆயுதப் போர்த்திறன் கொண்டவை, தங்கள் இலக்கை வெற்றிகரமாக தாக்கியதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

உயர் தொழில்நுட்பம் கொண்ட பதினெட்டு அதிநவீன முக்கிய போர் டாங்கிகளான லியோபார்ட் 2 டாங்கிகளை ஜேர்மனி, உக்ரைனுக்கு வழங்கியுள்ள நிலையில், இந்த சோதனை நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. (அ)



# எல். பி. எல். ரி - 20 தொடர் ஜூலையில் ஆரம்பம்!

கொழும்பு, மார்ச் 29

எல். பி. எல். இருபது - 20 எனப்படும் லங்கா பிறீமியர் லீக் தொடரின் நான்காவது பருவத்தை இலங்கை கிரிக்கெட் சபை எதிர்வரும் ஜூலை, ஓகஸ்ட் மாதங்களில் நடத்தவுள்ளது.

ஐந்து அணிகள் பங்குபற்றும் இந்தத் தொடர் எதிர்வரும் ஜூலை 31ஆம் திகதி ஆரம்பமாகி ஓகஸ்ட் 22ஆம் திகதி நிறைவடையவுள்ளது.

"இந்த சுற்றுப் போட்டியை ஜூலை, ஓகஸ்டில் நடத்துவதற்கு நாங்கள் தீர்மானித்துள்ளோம். இந்தக் காலப்பகுதியிலேயே வெளிநாட்டு வீரர்களை வெகுவாக கவர்ந்திழுக்கக் கூடியதாக இருக்கும். அத்துடன், இலங்கையின் சர்வதேச கிரிக்கெட் நாட்காட்டிக்கு மிகவும் பொருத்தமாக அமையும்" என எல். பி. எல். பணிப்பாளர் சமந்த தொடன்வல தெரிவித்தார்.

சர்வதேச வீரர்களின் பங்கேற்புடன் இலங்கையில் நடத்தப்படும் அதி உயரிய உள்ளூர் கிரிக்கெட் போட்டி இதுவாகும். இந்த சுற்றுப் போட்டியில் பங்குபற்றும் ஒவ்வொரு அணியிலும் 6 வெளிநாட்டு வீரர்களும் 14 உள்ளூர் வீரர்களுமாக 20 வீரர்கள் பதிவுசெய்யப்படுவர்.

நடந்து முடிந்த 3 பருவங்களிலும் திசர பெரேரா தலைமையிலான யாழ்ப்பாணம் அணி சம்பியனாகியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அணி வீரர்கள் காயத்தால் அவதி ஐ. பி. எல்லில் ஆடுவது சந்தேகம்!

IPL®

சென்னை, மார்ச் 29

வரும் 31ஆம் திகதி ஐ. பி. எல். 16ஆவது தொடர் ஆரம்பமாகவுள்ளது. பத்து அணிகளும் இந்தத் தொடருக்கு தங்களை ஆயத்தப்படுத்தி வருகின்றன. இருந்தாலும் பல அணிகளின் பிரதான வீரர்கள் காயத்தால் அவதிப்பட்டு வருகின்றனர். அதனால் அணிகளுக்கும் சிக்கல் எழுந்துள்ளது.

இந்நிலையில், காயம் அடைந்துள்ள வீரர்களுக்கு சரியான மாற்று வீரரை அணிகள் களம் இறக்க வேண்டி உள்ளது. இதில் ஆடும் பதினொருவரில் இடம்பெறும் வீரர்களும் அடங்குவர். இதில் சில அணிகளின் தலைவர்களும் அடக்கம்.

காயமடைந்த வீரர்களின் விவரம் வருமாறு, ஜஸ்ப்ரீத் பும்ரா - மும்பை இந்தியன்ஸ், ரிஷப் பந்த் - டில்லி கப்பிடல்ஸ், ஸ்ரேயாஸ் ஐயர் - கொல்கத்தா நைற் ரைடர்ஸ், கைல் ஜேமிசன் - சென்னை சுப்பர் கிங்ஸ், வில் ஜேக்ஸ் - றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு, பிரசித் கிருஷ்ணா - ராஜஸ்தான் றோயல்ஸ், ரிச்சர்ட்சன் - மும்பை இந்தியன்ஸ், ஜொன்னி பெயர்ஸ்ரோ - பஞ்சாப் கிங்ஸ்.

இவர்கள் மட்டுமல்லாது மேலும் சில வீரர்கள் உடல் தகுதி இல்லாமல் அவதிப்பட்டு வருகின்றனர் என்றும் கூறப்படுகின்றது. இதனால் அவர்கள் இந்தத் தொடரில் பங்கேற்பதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. (ஐ)

# இந்திய வீரர்களின் சம்பள ஒப்பந்தம்: ஜடேஜாவுக்கு 31 கோடி ரூபாய் சம்பளம்

புதுடில்லி, மார்ச் 29

இந்திய கிரிக்கெட் வீரர்களின் ஒப்பந்தம் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் படிநிலையில் முதல்நிலை வீரர்களில் 'ஏ' தரத்தில் இருக்கும் ரோஹித் சர்மா, விராட் கோலி, ஜஸ்பிரித் பும்ராவுடன் ரவீந்திர ஜடேஜாவும் இணைந்துள்ளார்.

அக்சர் பட்டேல், ஹார்திக் பாண்ட்யா ஏ தரத்தில் இணைந்துள்ளனர். இதற்கு முன்னர் இருவரும் முறையே 'பி' மற்றும் 'சி' தரத்தில் இருந்தனர். கே. எல். ராகுல், ஏ தரத்திலிருந்து 'பி' தரத்துக்கு இறக்கப்பட்டார். ஷுப்மன் கில் மற்றும் சூரியகுமார் யாதவ் 'சி'தரத்திலிருந்து 'பி' தரத்துக்கு முன்னேறியுள்ளனர்.

ஷர்துல் தாகூர் ஏற்கெனவே 'பி' தரத்தில் இருந்தவர் 'சி' தரத்துக்கு சென்றுள்ளார். குல்தீப் யாதவ், இஷான் கிஷன், தீபக் ஹூடா, வாஷிங்டன் சுந்தர், சஞ்சு சாம்சன், அர்ஷ்தீப் சிங், கே. எஸ். பரத் ஆகியோர் 'சி' தரத்தில் இணைக்கப்பட்ட புதிய வீரர்கள் ஆவார்கள்.

கிரேட் ஏ பிரிவில் உள்ள ரோஹித் சர்மா, விராட் கோலி, ஜடேஜா, பும்ரா ஆகியோரின் சம்பளம் 7 கோடி இந்திய ரூபாயாகும் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 31.5 கோடி ரூபாயாகும்.

ஏ தரத்தில் 5 கோடி இந்திய ரூபாய் பிரிவில் பாண்ட்யா, அஸ்வின், முகமது ஷமி, ரிஷப் பந்த், அக்சர் பட்டேல் உள்ளனர்.

பி தரத்தில் உள்ள புஜாரா, ராகுல், ஸ்ரேயாஸ் ஐயர், சிராஜ், சூர்யகுமார் யாதவ், ஷுப்மன் கில்லுக்கு 3 கோடி இந்திய ரூபாய் சம்பளம்.



சி தரமான ஒரு கோடி இந்திய ரூபாய் பிரிவில் உமேஷ் யாதவ், ஷிகர் தவான், ஷர்துல் தாக்கூர், இஷான் கிஷன், தீபக் ஹூடா, சஹல், குல்தீப் யாதவ், வாஷிங்டன் சுந்தர், சஞ்சு சாம்சன், அர்ஷ்தீப் சிங், கே.எஸ். பரத் உள்ளனர்.

ரஹானே, இஷாந்த் சர்மா, புவனேஷ்வர் குமார், மயங்க் அகர்வால், ஹனுமா விஹாரி, சஹா, தீபக் சாஹர் ஆகியோர் ஒப்பந்தத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

எனினும், இந்த சம்பள ஒப்பந்த விவகாரம் ரசிகர்கள் மத்தியில் பெரும் வாதப்பிரதிவாதங்களை எழுப்பியுள்ளது. (ஐ)



# மியாமி ஓப்பன் ரென்னிஸ் சபலெங்கா 4ஆவது சுற்றில்

மியாமி, மார்ச் 29

ரென்னிஸ் உலகின் முன்னிலை வீராங்கனையான அரினா சபலெங்கா நான்காவது சுற்றுக்கு முன்னேறினார்.

மியாமி ஓப்பன் டென்னிஸ் தொடர் அமெரிக்காவில் நடக்கிறது.

இதில்,பெண்கள் ஒற்றையர் பிரிவில் 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் உலக தரவரிசையில் 2ஆவது இடத்தில் உள்ள அரினா சபலென்கா (பெலாரஸ்) 6-1, 6-2 என்ற நேர்செற்றில் செக் குடியரசின் மேரி போஸ் கோவாவை தோற்கடித்து 4ஆவது சுற்றுக்குள் நுழைந்தார்.

அமெரிக்க ஓப்பன் தொடரின் முன்னாள் சம்பியனான கனடாவின் பியாங்கா அண்ட்ரிஸ்கு 6-4, 6-4 என்ற நேர்செற்றில் அமெரிக்காவின் சோபியா கெனினை வெளியேற்றினார்.

இதே சமயம் ஒலிம்பிக் சம்பியனும், தரவரிசையில் 9ஆவது இடத்தில் இருப்பவருமான பெலின்டா பென்சிச் (சுவிட்சர்லாந்து) 6-7 (8-10), 3-6 என்ற நேர் செற்றில் ரஷ்யாவின் எகதெரினா அலெக் சாண்ட்ரோவாவிடம் பணிந்தார்.

# பாகிஸ்தான் ஆறுதல் வெற்றி சதாப் கான் 100 விக்கெட்கள்!

ஷார்ஜா, மார்ச் 29

ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான இறுதிப் போட்டியில் இருபது - 20 போட்டியில் பாகிஸ்தான் வெற்றி பெற்றது. இந்தப் போட்டியில் இருபது - 20 கிரிக்கெட்டில் 100 விக்கெட்களை வீழ்த்திய முதல் வீரர் என்ற பெருமையை பாகிஸ்தான் வீரர் சதாப் கான் பெற்றுள்ளார்.

பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையேயான இருபது - 20தொடர் நடைபெற்றது. இதில் ஆப்கானிஸ்தான் அணி முதல் இரண்டு போட்டிகளில் வெற்றி பெற்று தொடரை 2-0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இந்நிலையில் இரு அணிகளுக்கு இடையேயான கடைசி இருபது - 20 போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற ஆப்கானிஸ்தான் அணி பந்து வீச்சை தெரிவு செய்தது. இதன்படி முதலில் துடுப்பாட்டம் செய்த பாகிஸ்தான் அணி 7 விக்கெட்கள் இழப்புக்கு 182 ஓட்டங்கள் எடுத்தது.

ஆப்கானிஸ்தான் தரப்பில் முஜீப் உர் ரஹ்மான் 2 விக்கெட்களும், பாரூக்கி, நபி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதனையடுத்து களமிறங்கிய ஆப்கானிஸ்தான் அணி 116 ஓட்டங்களில் சகல விக்கெட்களையும் இழந்தது.

பாகிஸ்தான் தரப்பில் ஷதாப் கான் 3 விக்கெட்களை கைப்பற்றினார். ஆட்டநாயகனாக ஷதாப் கான் தெரிவானார்.



# இலங்கை - நியூசி. போட்டி மழையால் கைவிடப்பட்டது!

கிறிஸ்ட்சேர்ச், மார்ச் 29

நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வரும் இலங்கை கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்று ஆடி வருகிறது.

இதில் முதல் ஒருநாள் போட்டியில் நியூசிலாந்து அபார வெற்றி பெற்று தொடரில் 1-0 என முன்னிலையில் உள்ளது.

இந்நிலையில் இவ்விரு அணிகள் இடையிலான 2வது ஒருநாள் போட்டி நேற்று கிறிஸ்ட்சேர்ச்சில் நடைபெறுவதாக இருந்தது.

ஆனால், நாணயச் சுழற்சியில் ஈடுபடும் முன்னரே கடும் மழை பெய்தது. இந்த நிலையில், போட்டி கைவிடப்பட்டது.

இந்த இரு அணிகள் இடையிலான 3ஆவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி நாளை மறுதினம் ஹமில்டன் நகரில் நடைபெறுகிறது. தொடரை இழக்காமல் இருக்க அந்த போட்டியில் கட்டாயம் வெற்றி பெற வேண்டும் என்ற நெருக்கடியில் இலங்கை அணி உள்ளது.

ஈழநாடு



# முன்னாள் சபாநாயகர் ஜோசப் காலமானார்!

கொழும்பு, மார்ச் 29

முன்னாள் சபாநாயகரும் முன்னாள் அமைச்சருமான ஜோசப் மைக்கல் பெரேரா காலமானார்.

82 ஆவது வயதில் அன்னார் தனது இல்லத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை காலமானார்.

இலங்கை பாராளுமன்றத்தின் 17 ஆவது சபாநாயகராக டிசெம்பர் 2001 முதல் 2004 பெப்ரவரி வரை செயல்பட்டிருந்தார். 2015 இல் அமைச்சராகவும் இவர் செயல் பட்டிருந்தார்.

1941ஆம் ஆண்டு பிறந்த இவர் ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தார். 1964 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு வரை



ஜா-எல நகர சபையில் உறுப்பினர், தலைவர் பதவிகளை வகித்திருந்தார்.

அவர், 1978 ஆம் ஆண்டு இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் முதலாவது பாராளுமன்றத்தையும் பிரதிநிதித்துவப் படுத்தியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரம் பொது இணக்கப்பாட்டை எட்ட முடிவு

## சுற்றாடல்துறை குழு தலைவர் அஜித் மன்னப்பெரும



கொழும்பு, மார்ச் 29

**நாட்டின் கடல் பரப்பில் தீ விபத்துக்குள்ளாகி கடலில் முழுமையாக மூழ்கிய எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பில் எதிர்வரும் ஏப்ரல் முதல் வாரமளவில் பொது இணக்கப்பாட்டுக்கு வர தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுற்றாடல் துறை தொடர்பான பாராளுமன்ற துறைசார் மேற்பார்வை குழுவின் தலைவர் அஜித் மன்னபெரும தெரிவித்தார்.**

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

2021 ஆம் ஆண்டு மே கொழும்புக்கு அண்மையில் நீர்கொழும்பை அண்டிய கடல் பகுதியில் எக்ஸ்பிரஸ் பேர்ள் சரக்கு கப்பல் தீ விபத்துக்கு உள்ளாகி கடலில் முழுமையாக மூழ்கியது.

இந்த தீ விபத்தால் கடல் வளத்துக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு குறித்த நிறுவனத்தில் இருந்து நட்டஈட்டை பெற்றுக் கொள்வதற்கு வழக்கு தாக்கல் செய்யும் விடயத்தில் இரு வேறுபட்ட நிலைப்பாடு காணப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பில் உரிய தரப்பினருடன் பேச்சுகளை மேற்கொண்டு எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் வாரமளவில் பொது இணக்கப்பாட்டை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கப்பல் விபத்து தொடர்பில் நீதியமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ள 40 துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய ஆய்வு அறிக்கையை சுற்றாடல் துறை தொடர்பான பாராளுமன்ற மேற்பார்வை குழுவில் பரிசீலனை செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

கப்பல் மூழ்கிய பகுதிக்கு சென்று ஆய்வு அல்லது கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது சட்ட சிக்கல் காணப்படுகிறது. ஆகவே சகல தரப்பினருடன் இணக்கப்பாட்டுடன் இந்த பிரச்னைக்கு தீர்வு காண தீர்மானித்துள்ளோம் - என்றார். (ஐ)

# இலங்கைக்கான இந்திய அரசியல் ஆலோசகர் பிரதித் தூதுவராகிறார்

கொழும்பு, மார்ச் 29

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகரகத்தின் அரசியல் ஆலோசகராக செயல்பட்ட திருமதி பானுபிரகாஷ் தென்னாபிரிக்காவுக்கான பிரதி உயர்ஸ்தானிகராக பதவி உயர்வு பெற்றுச் செல்லவுள்ளார்.

2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் இலங்கையின் இந்திய உயர்ஸ்தானிகரத்தில் அரசியல் பிரிவு ஆலோசகராக பதவியேற்றுக் கொண்ட அவர் கடந்த மூன்று ஆண்டுகளாக அப்பதவியில் கடமையாற்றியிருந்தார்.



2006ஆம் ஆண்டு இந்திய இராஜதந்திர சேவையில் இணைந்து கொண்ட அவர் தனது 17வருட சேவைக்காலத்தில் அடையும் அதியுயர்ந்த பதவியாக மேற்படி பிரதி உயர்ஸ்தானிகர் பதவி காணப்படுகின்றது.

இவ்வார இறுதியில் அவர் இலங்கையிலிருந்து வெளியேறிச் செல்லவுள்ளதுடன் தென்னாபிரிக்கத் தலைநகர் பிரிட்டோரியாவில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகரகத்தில் அடுத்தவாரம் பிரதி உயர்ஸ்தானிகர் பதவியை பொறுப்பேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# லொறியுடன் மோ. சைக்கிள் மோதியதில் ஒருவர் மரணம்

ஹற்றன், மார்ச் 29

லொறியும் மோட்டார் சைக்கிளும் மோதிய விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியானார்.

ஹற்றன் - கொழும்பு பிரதான வீதியில் வட்டவளை, தியகல பகுதியில் நேற்று காலை இடம்பெற்ற இந்த விபத்தில், மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற வீரபிட்டிய, மொரகஹாபள்ளம பிரதேசத்தைச் சேர்ந்த பிரதீப் குமார அஸ்விஸ் (வயது - 30) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

குளியாப்பிட்டி பகுதியிலிருந்து ஹற்றன் நோக்கி வந்து கொண்டிருந்த லொறியும் ஹற்றனில் இருந்து கினிகத்தேன நோக்கி பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிளுமே விபத்துக்குள்ளாயகியுள்ளன.

மழை காராணமாக மோட்டார் சைக்கிள் வழுக்கிச் சென்று லொறியின் சக்கரத்தில் சிக்குண்டே உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பெற்றோலிய கூட்டுத்தாபன ஊழியர்கள் இன்று மூன்றாவது நாளாகப் போராட்டம்!

கொழும்பு, மார்ச் 29

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை தனியார் மயப்படுத்தும் முயற்சிக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆரம்பிக்கப்பட்ட சத்தியாக்கிரக போராட்டம் இன்று புதன்கிழமை மூன்றாவது நாளாகவும் தொடரவுள்ளது என்று அறிவிக்கப்பட்டது.

தமது அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடி தீர்மானம் எடுக்கப் படவுள்ளதாக இலங்கை சுதந்திர ஊழியர் சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலையங்களை தனியார் நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளமை, மிகவும் கவலைக்குரிய விடயமென இலங்கை சுதந்திர ஊழியர் சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, இலங்கையின் எரிபொருள் சந்தைக்குள் பிரவேசிப்பதற்காக 3 வெளிநாட்டு நிறுவனங்களுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சீனாவின் சினொபெக், அவுஸ்திரேலியாவின் யுனைடட் பெற்றோலியம் மற்றும் அமெரிக்காவின் ஆர். எம். பொக்ஸ் ஆகிய நிறுவனங்களுக்கே இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையிலேயே, இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்த சத்தியாக்கிரக போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

# இடைநிலை மாணவர் சேர்க்கை பதிவு கடிதங்கள் வெளியிடப்படாது!

யாழ்ப்பாணம், மார்ச் 29

இடைநிலை வகுப்புகளுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்ள பதிவு செய்யும் கடிதங்களை வெளியிடாது இருக்க கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளதாக கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான பத்திரத்துக்கு நேற்று செவ்வாய்க்கிழமை அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாக ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

எனவே, முதலாம் ஆண்டுக்கு மாணவர்களை இணைக்கும் நடவடிக்கைகளும், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையைத் தொடர்ந்து தரம் 6 இற்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கைகளும் தற்போது நடைபெற்று வருவதால் சித்திரைப் புத்தாண்டுக்குப் பின்னர் இது தொடர்பான அறிவித்தல் வெளியாகும் என அவர் தெரிவித்தார்.

மேற்குறிப்பிட்ட சேர்க்கைகள் முடிந்தவுடன் இடைநிலை வகுப்புகளுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வது தொடர்பான அறிவிப்பு வெளியாகும் என அவர் தெரிவித்தார்.

மாதிரி விண்ணப்பப் படிவம் ஒன்று ஏப்ரல் 15ஆம் திகதிக்கு பின்னர் பொது அறிவிப்பு மூலம் வெளியிடப்படும். நிரப்பப்பட்ட படிவங்கள் பெற்றோர்கள் தம் பிள்ளைகளை இணைக்க விரும்பும் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கையின்படி ஒரு குறிப்பிட்ட மதிப்பெண் திட்டத்தின் அடிப்படையில் மாணவர்கள் தேர்வு செய்யப்படுவார்கள். புதிய அமைப்பின் பிரகாரம் பெற்றோர்கள் தம் பிள்ளைகளை பாடசாலையில் இணைக்க கல்வி அமைச்சுக்கு வந்து தமது நேரத்தை வீணடிக்கத் தேவையில்லை - என்றார். (ஐ)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச் 29

நீர்வேலி கந்தசுவாமி கோயிலில் வாராந்த சுக்கிரவார சிறப்பு சொற்பொழிவு ஆலயத்தின் சண்முக விலாச மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் ஆலய பரிபாலன சபைத் தலைவர் த. சோதிலிங்கத்தின் தலைமை உரையைத் தொடர்ந்து, சிறப்பு சொற்பொழிவை சைவப்புலவர் த. மனோஜ் குமார் "பங்குனியில் பத்தினி வழிபாடு" என்னும் தலைப்பில் ஆற்றுவார்.

சொற்பொழிவின் இறுதியில் மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ஐ)

# சட்டவிரோதமாக மதுபானத்தை உற்பத்தி செய்த இருவர் கைது!

கொழும்பு, மார்ச் 29

சட்டவிரோத மது உற்பத்தி நிலையத்தை சுற்றி வளைத்தை பொலிஸார் இருவரை கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பண்டாரகம, குங்கமுவ பிரதேசத்தில் இடம்பெற்ற இந்த சுற்றிவளைப்பில் சுமார் 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான 33.75 லீற்றர் சட்டவிரோத மதுபான ஸ்பிரிட், மூன்று கோடா பீப்பாய்கள், எரிவாயு அடுப்பு, எரிவாயு சிலிண்டர் மற்றும் வடிகட்டுவதற்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள் பல பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

பண்டாரகம, ஹொரணை, பாணந்துறை, கஹதுடுவ உள்ளிட்ட பிரதேசங்களுக்கு பல்வேறு நபர்கள் ஊடாக சில காலமாக சட்டவிரோதமாக காய்ச்சிய மதுபானம் விநியோகிக்கப்பட்டுள்ளதாக விசாரணையில் தெரிய வந்ததாகக் கூறப்பட்டது. (ஐ)

## எரிபொருள்...

தெரிவித்தார்.

தொழிற்சங்க செயல்பாட்டாளர்கள் ஊழியர்களை கடமைக்கு வரவிடாமல் பலவந்தமாக தடுத்தமையால் முன்னர் தாமதமாகி வந்த எரிபொருள் விநியோகத்துக்கு பொலிஸார் மற்றும் படையினர் பாதுகாப்பு வழங்குவதன் மூலம் இயல்பாக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

## பாதிக்கப்பட்ட...

அத்துடன், பயங்கரவாத தடுப்பு சட்டத்துக்கான புதிய திருத்தங்கள் முக்கிய மனித உரிமை கரிசனைகளுக்கு தொடர்ந்தும் தீர்வை காண தவறியுள்ளன. இந்த சட்டத்தின் கீழ் தமிழர்கள், முஸ்லிம்கள் தொடர்ந்தும் இலக்கு வைக்கப்படுகின்றனர் என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபை 2022 -23ஆம் ஆண்டுக்கான இலங்கை நிலவரம் குறித்த வருடாந்த அறிக்கை நேற்று செவ்வாய்க்கிழமை கொழும்பில் வெளியிடப்பட்டது. இந்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

மேலும், பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தவர்கள் கண்காணிக்கப்படுதல் அச்சுறுத்தல், அமைதியான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட முடியாதவாறு கட்டுப்படுத்தப்படுதல், நினைவுகூருவதற்கான அனுமதி மறுக்கப்படுதல் போன்றவற்றையும் எதிர்கொள்கின்றனர். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நிதி இழப்பீட்டை ஏற்றுக்கொள்ளுமாறும் மரண சான்றிதழை பெற்றுக்கொள்ளுமாறும் அழுத்தங்களுக்கு உள்ளாகின்றனர்.

போரால் பாதிக்கப்பட்டவர்களின் துயரங்களுக்கு தீர்வை காண்பதற்கு இலங்கை அரசாங்கம் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைப்பது குறித்து புதுப்பிக்கப்பட்ட ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளது. ஆனால், அந்த நடைமுறை நல்லிணக்க பொறிமுறை குறித்த பொதுமக்கள் கலந்தாய்வுகளின் அடிப்படையில் இந்த வருடத்துக்குள் உருவாக்கப்பட வேண்டும்.

தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு உட்பட உள்நாட்டு பொறிமுறைகள் தொடர்ந்தும் துருவமயப்படுத்தப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

மிகமோசமான பொருளாதார நிலைமைக்கு எதிராக ஆயிரக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால், அரசாங்கம் உடன்பட மறுப்பவர்களுக்கு எதிராகத் தனது நடவடிக்கையை தீவிரப்படுத்தியது. கருத்து சுதந்திரத்துக்கான உரிமையும் அமைதியாக ஒன்றுகூடுவதற்கான உரிமையும் சட்ட அமுலாக்கல் அதிகாரிகளால் கடும் பாதிப்புக்கு உள்ளாகின. சில சந்தர்ப்பங்களில் இது சட்டவிரோதமாக பயன்படுத்தப்பட்டதால் உயிரிழப்பும் காயங்களும் ஏற்பட்டன என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் தன்னிச்சையாக கைதுசெய்யப்பட்டுள்ளனர். மிகவும் ஆபத்தான பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை பயன்படுத்தி தடுத்துவைக்கப்பட்டனர். தடுப்பில் மிகமோசமாக நடத்தப்பட்டனர்.

உள்நாட்டு போரின் போது இழைக்கப்பட்ட மிகவும் பாரதூரமான மனித உரிமை மீறல்களுக்கு தீர்வு காணப்படாத நிலையே உள்ளது. பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்டவர்களின் குடும்பத்தவர்கள் தொடர்ந்தும் உண்மை மற்றும் நீதிக்கான போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

எரிபொருளுக்காக வரிசையில் நின்றவர்கள் மீது அளவுக்கதிகமான தேவையற்ற பலப் பிரயோகம் இடம்பெற்ற சம்பவங்களும் உள்ளன.

மோசமான பயங்கரவாத தடுப்பு சட்டத்தை அரசாங்கம் பயன்படுத்தப் போவதில்லை என்று உறுதிமொழி அளித்தபோதிலும் அது தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்றது என்றும் குறிப்பிட்டுள்ளது. (ஐ)

## சுயாதீன...

குழுக்களை நியமிக்கும் நடவடிக்கை நீண்டகாலமாக தாமதித்தமைக்கான காரணமாகும். சில விண்ணப்பதாரிகள் 9 ஆணைக்குழுக்களுக்கும் விண்ணப்பித்துள்ளனர். இதனால், தகுதியானவர்களை தெரிவு செய்வதற்கு சிரமம் ஏற்பட்டிருந்தது.

அத்துடன், புதிதாக அமைக்க இருக்கும் சுயாதீன ஆணைக்குழுக்களான தேர்தல் ஆணைக்குழு, அரச சேவை ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு, கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, இலஞ்சம் அல்லது ஊழல் ஆணைக்குழு, நிதி ஆணைக்குழு, எல்லை நிர்ணய ஆணைக்குழு மற்றும் தேசிய கொள்வனவு ஆணைக்குழு ஆகியனவாகும்.

சுயாதீன ஆணைக்குழுக்கள் அனைத்தும் அரசமைப்பு பேரவையாலேயே நியமிக்கப்படுகின்றன. அரச மைப்பு பேரவை உருவாக்கப்பட்டு தற்போது 3 மாதங்கள் கடந்துள்ளன. அரசமைப்பு பேரவை முதல்தடவையாக கூடியது கடந்த ஜனவரி 25 ஆம் திகதி என்பது குறிப்பிடத்தக்கதாகும். (ஐ)

## வெடுக்குநாறி

நேற்று இடம்பெற்ற கிளிநொச்சி நகர பேருந்து நிலையத் திறப்பு விழா வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், இன - மத ரீதியான வன்முறைகளுக்கு தற்போதைய அரசாங்கம் இடமளிக்காது. வெடுக்கு நாறி ஆதி சிவன் ஆலயம் மீள அமைக்கப்படுவதற்கு ஜனாதிபதி மற்றும் அமைச்சர்கள் ஆதரவாக இருக்கின்றனர் - என்றும் அவர் கூறினார். அத்துடன், வெடுக்கு நாறிமலை விவகாரம் தொடர்பில் தன்னுடன் இணைந்து அமைச்சர் ஜீவன் தொண்டமானும் அமைச்சரவையின் கவனத்துக்கு கொண்டு வந்திருந்தார் என்றும் குறிப்பிட்டார். (ஐ)

## மகிந்த...

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

மத்திய பிரதேசத்தின் - சாஞ்சியில் புத்த மத வளாகத்திலிருந்து 5 கிலோமீற்றர் தொலைவிலுள்ளது சல்மத்பூர். இங்குள்ள மலைக்குன்றில் 300 கோடி இந்திய ரூபாய் செலவில் புத்த பல்கலைக்கழகம் அமைக்கப்படுகிறது.

5 வருடங்களுக்கு முன்னர், அப்போது இலங்கையின் ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ஷ அநுராத புரத்திலிருந்து வெள்ளரசு மரக்கிளையை கொண்டுசென்று அந்த மலைக்குன்றில் நட்டார்.

இந்த வெள்ளரச மரக்கிளை புத்தருக்கு ஞானோதயம் கிடைத்த போதி மரத்திலிருந்து - 3ஆம் நூற்றாண்டில் - சங்கமித்தையால் கொண்டு செல்லப்பட்டு, அநுராதபுரத்தில் நடப்பட்ட புனித வெள்ளரச மரத்தின் கிளையாகும்.

மகிந்த ராஜபக்ஷ நட்ட இந்த மரம் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதால் இதனை மாநில அரசு பராமரித்து வருகிறது. இந்த மரத்துக்கு தண்ணீர் ஊற்றுவதற்காக தனி தண்ணீர் தொட்டி கட்டப்பட்டது. மரத்தின் ஆரோக்கியத்தை கண்காணிக்க, மத்திய பிரதேச வேளாண் துறையிலிருந்து தாவரவியல் நிபுணர் ஒருவர் வாரம் ஒருமுறை வந்து மரத்தை பார்வையிடுகிறார்.

மேலும், மரத்தை பாதுகாக்க ஊர்க்காவல் படையைச் சேர்ந்த நால்வர் கடந்த 2012ஆம் ஆண்டு பணிக்கு அமர்த்தப்பட்டனர். இவர்கள் இன்னமும் இந்த மரத்தை பாதுகாத்து வருகின்றனர். இதற்காக மத்திய பிரதேச அரசு ஆண்டுக்கு 12 இலட்சம் இந்திய ரூபாய் (நம் நாட்டு மதிப்பில் 54 இலட்சம் ரூபாய்) செலவு செய்கிறது என்று கூறப்படுகின்றது. (ஐ)

# திருடப்பட்ட நகைகள் ஒரு மணிநேரத்தில் மீட்பு

### பருத்தித்துறை பொலிஸ் அதிரடி

வடமராட்சி, மார்ச் 29

பட்டப்பகலில் வீடுடைத்து நகைகள் களவுபோனதையறிந்து அதிரடியாக செயல்பட்ட பருத்தித்துறை பொலிஸார் ஒரு மணி நேரத்தில் சந்தேகநபர்களை கைது செய்தனர்.

புலோலி - காந்தியூர் பகுதியில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது குறித்து மேலும் அறிய வருவதாவது,

அரச உத்தியோகத்தர்கள் வசித்த அந்த வீட்டார் வெளியில் சென்றதை சாதகமாகப் பயன்படுத்தி வீட்டின் பின் கதவை உடைத்து உள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த காப்பு, சங்கிலி, கைச்சங்கிலி, நெக்லஸ் என்று மூன்றே முக்கால் பவுண் நகைகள் மற்றும் வெளிநாட்டு நாணயங்களையும் திருடிச் சென்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அறிந்து அதிரடியாக செயல்பட்ட பருத்தித்துறை பொலிஸார் ஒரு மணி நேரத்திலேயே சந்தேகநபர்கள் இருவரை பிடித்ததுடன், அவர்களிடமிருந்து நகைகளையும் மீட்டனர்.

கைதானவர்களை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ- 02)

# காட்டு யானைகளால் வீடு சேதமாக்கப்பட்டது

மட்டக்களப்பு, மார்ச் 29

மட்டக்களப்பு மண்முனை மேற்கு, வவுணதீவு பிரதேசத்தி லுள்ள நெடியமடு கிராமத்தில் நேற்று முன்தினம் இரவு ஊடுருவிய காட்டு யானைகள் கிராமவாசி ஒருவரின் வீட்டை உடைத்துள்ளன.



வீட்டை உடைத்த யானைகள் அங்கிருந்த அரிசி, நெல், கச்சான் போன்ற உணவுப் பொருட்களை உண்டதோடு, உடைமைகளையும் சேதப்படுத்தின.

இதேசமயம், அப்பகுதியில் பாடசாலை ஒன்றும் யானைகளால் சேத மாக்கப்பட்டுள்ளது என்று தெரிய வந்தது. (ஐ)

## குழந்தைகளில்...

தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

இந்த நாட்களில் சிறு குழந்தைகள் மத்தியில் ஒரு வகையான வைரஸ் காய்ச்சல் பரவுகிறது. இதன் அறிகுறிகளாக இருமல், சளி, வாந்தி மற்றும் கண்களில் நீர் வடிதல் போன்றவைகளையும் சிலருக்கு வயிற்றுப்போக்கும் ஏற்படலாம். இவ்வாறு அடையாளம் காணப்பட்டவர்களுக்கு இன்புளுவன்சா நோய் தொற்று போன்ற சாதகமான அறிகுறிகள் காணப்பட்டன.

இந்நிலையில் குழந்தைகளுக்கு இருமல், சளியுடன் சேர்ந்து காய்ச்சல் ஏற்படலாம். குறிப்பாக கண்களில் இருந்து நீர் வடிவது போன்ற நிலை காணப்படுமாயின் குழந்தைகளை பாடசாலை உள்ளிட்ட பொது இடங்களுக்கு அனுப்ப வேண்டாம்.

மேலும் 3 நாட்களுக்கு மேல் காய்ச்சல் இருக்குமாயின் பரசிட்டமோல் எடுத்துக் கொள்ளலாம். மேலும் நன்றாக ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டும். அத்துடன், நன்கு கொதிக்க வைத்த நீரை பருக வேண்டும்.

இருப்பினும் தொடர்ச்சியாக நோய் காணப்படுமாயின் டெங்கு பரிசோதனை செய்து கொள்வது அவசியம். மேலும் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற வேண்டும். முடியுமான வரை முகக்கவசங்களை குழந்தைகளுக்கு அணிவிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார். (ஐ)

## சித்தமருத்துவ...

தற்போது காணப்படுகின்ற சித்த மருத்துவ துறைகளை பீடங்களாகத் தரமுயர்த்துதல் தொடர்பில் கடந்த பெப்ரவரி 6 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

இதற்காக போதியளவு கல்வி மற்றும் ஊழியர்கள் வசதிகள் உள்ளனவா என்பதை ஆராய்ந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அறிக்கையைப் பெறத் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கமைய, சித்த மருத்துவ துறைகளை பீடங்களாக மாற்றம் செய்வதற்குப் போதுமானளவு மனிதவளம் மற்றும் பௌதிக வளங்கள் காணப்படுவதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுதிப்படுத்தியது.

கல்வி அமைச்சர் சமர்ப்பித்த குறித்த விடயங்களை கருத்தில் கொண்டு குறித்த சித்த மருத்துவ துறைகள பீடங்களாகத் தரமுயர்த்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஐ)

## பயங்கரவாத...

என்ற புதிய சட்டமூலம் வர்த்த மானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. பயங்கரவாத தடுப்பு சட்டம் 40 வருடங்களுக்கு மேலாக நாட்டிலே அமுலில் இருக்கின்றது. ஆறு மாத காலத்துக்கு ஒரு தற்காலிக சட்டமாக கொண்டுவரப்பட்டு பின்னர், 1981 ஆம் ஆண்டு அது நிரந்தரமான சட்டமாக மாற்றப்பட்டது.

மிகவும் மோசமான ஒரு சட்டம் பலராலே அப்படியாக விமர்சிக்கப்படுகின்ற சட்டம் அதை நீக்குவதாக தற்போதைய ஜனாதி பதியே பிரதமராக இருந்தபோது 2017ஆம் ஆண்டு ஐரோப்பிய ஒன்றியத்துக்கு வாக்குறுதி அளித்தி ருந்தார்.

பயங்கரவாத எதிர்ப்பு சட் டத்தை நாங்கள் முற்று முழுதாக எதிர்க்கிறோம் அதனை நிராகரிக் கின்றோம் அதற்கு எதிரான சட்டநடவடிக்கை எடுப்போம். புதிய சட்டம் கொண்டுவரப்படு வதாக இருந்தால் அது முதலிலே பொது அமைப்புகளோடு பேசி இணங்கப்பட வேண்டும்.

மனித உரிமைகள் ஆணைக்குழு பயங்கரவாதத்துக்கு என்று விசேட சட்டம் தேவையில்லை என்று பரிந்துரைத்துள்ளது. எனவே புதிய சட்டத்தை அரசாங்கம் கொண்டு வருவதை எதிர்க்கிறோம் - என்றார். (ஐ-03)

ஈழநாடு
Eelanadu

# சர்வதேச நாணய நிதியம் அளித்த கடனால் ஆபத்து!

## எச்சரிக்கிறது ஜே. வி. பி.

கொழும்பு, மார்ச் 29

"சர்வதேச நாணய நிதியத்தால் அண்மைக்காலத்தில் முன்வைக்கப்பட்ட மிக மோசமான நிபந்தனைகளே இலங்கை விவகாரத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன." - என்று ஜே.வி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துனெத்தி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கிடைத்த கடனை சிலர் புதையல் கிடைத்துவிட்டதுபோல கருதுகின்றனர். சர்வதேச நாணய நிதிய கடன் என்பது பயங்கரமானது. இந்த உண்மை தெரிந்திருந்தால் பட்டாசு கொளுத்தியிருக்க மாட்டார்கள்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை ஏற்ற எந்தவொரு நாடும் முன்னேறியது கிடையாது.

பணவீக்கம் அதிகரிப்பு, கடனை மீள செலுத்தமுடியாமை உள்ளிட்ட விடயங்களால் பாதிக்கப்பட்டிருந்த நாடொன்று சர்வதேச நாணய நிதிய கடனால் எங்கும் மீண்டுள்ளதா? நாடொன்று தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் முன்வைத்துள்ள மிக மோசமான நிபந்தனைகளே, இலங்கை விடயத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன." - என்றார். (ஐ)

## மரண அறிவித்தல்



### திருமதி திருச்செல்வம் நாகேஸ்வரி

யாழ். ஊர்காவற்றுறை புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருச்செல்வம் நாகேஸ்வரி கடந்த 24-03-2023 வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற துரையப்பா - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - கண்ணகை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற திருச்செல்வத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான விசாலாட்சி, சரஸ்வதி, இராசலட்சுமி, பரமேஸ்வரி, பிரேமாவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், மாணிக்கவாசகரின் அன்பு அக்காவும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, நாகராஜா, இராசரத்தினம், பத்மநாதன், சபாரட்ணம், பார்வதி, ராசரத்தினம், நடராசா, நாகபூசணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், அமிர்தவள்ளி, வரதேஸ்வரி, செல்வராணி, காலஞ்சென்றவர்களான சிவசம்பு, பரமலிங்கம் ஆகி யோரின் அருமைச் சகலியும், திருமகள், ஜெகதீஸ்வரன், கலைமகள், பூமகள், காலஞ்சென்ற ஜெயவரதன், நாமகள், சியாமளா ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுரேஸ்குமார், பிரேமமலர், மனோகர், சிவகுமார், சிவயோகநாதன், கேதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், சுயேன், செந்தா, சுயின், கிருஜன், கீர்த்திகன், அக்ஷயா, துசாந்தன், வைதேகி, தினேஸ், தனோஜன், சாருகன், பிரசான், ஐஸ்வர்யா, நிர்த்திகா, சிந்துயா, வருணிகா, பரதன், அகரன், சாஜிகரிஷா ஆகியோ ரின் அன்பு பேர்த்தியும், அஸ்ரேயனின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை எதிர்வரும் 02.04.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 - 11.30 மணிவரை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
**குடும்பத்தினர்**



படம் : ஐ.சிவசாந்தன்

# வெடுக்குநாறிமலை தலம் அழிப்பு நல்லூரில் நேற்று போராட்டம்!

யாழ்ப்பாணம், மார்ச் 29

வவுனியா வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் அழிக்கப்பட்டமைக்கு சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லூரில் போராட்டம் இடம்பெற்றது.

நேற்று செவ்வாய்க்கிழமை மாலை 5 மணியளவில் நல்லை ஆதீனம் முன்பாக சைவ அமைப்புகளின் ஏற்பாட்டில் குறித்த போராட்டம் நடைபெற்றது.

"தொல்லியல் திணைக்களமே தமிழர்களை தொலைக்காதே", "ஆதிசிவன் கோவில் தொடர்ந்து இலக்கு வைக்கப்படுவது ஏன்?", "சிவனை அசைத்தவனே அவனின் திருக்கூத்தை விரைவில் உணருவாய்", "சிவன் சொத்தை தீண்டினால் குலமே நாசமாகும்" போன்ற வாசகங்களை போராட்டகாரர்கள் தாங்கியிருந்தனர். (ஐ)

## யாழ்ப்பாணத்தின் உற்பத்திகளுக்கு சங்கிலியன் பூங்காவில் வார சந்தை

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ்ப்பாணம் மாவட்ட முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருட்களுக்கான சந்தை வாய்ப்பை பெற்றுக்கொள்ளும் முகமாக மாவட்ட செயலகத்தால் எதிர்வரும் ஏப்ரல் 2ஆம் திகதியிலிருந்து ஒவ்வொரு ஞாயிற்றுகிழமைகளிலும் சங்கிலியன் பூங்கா வளாகத்தில் வாராந்த சந்தை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட உற்பத்திப் பொருட்களுக்கான வாரந்த சந்தை என்ற கருப்பொருளில் முன்னெடுக்கப்படும் செயல்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் மாவட்ட விவசாயத்துறை, கைத்தொழில் துறை சார் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யமுடியும் என மாவட்ட செயலாளர் அ. சிவபாலசுந்தரன் அறிவித்துள்ளார்.

இதன் ஊடாக உற்பத்தியாளர்களின் இடைத்தரகர்களுக்கான செலவீனம் குறைக்கப்படுவதுடன் எதிர்காலத்தில் நுகர்வோர்களின் தேவைக்கேற்றவாறு உற்பத்தி நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு அவர்கள் தமது பொருளாதாரத்தில் முன்னேற்றமடைவதுடன் ஏனையவர்களுக்கும் வேலை வாய்ப்பை வழங்க முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது

எனவே, இந்த சந்தர்ப்பத்தை பின்பற்றி பயன் பெற விரும்பும் முயற்சியாளர்கள் தமது பிரதேச செயலகத் துடன் தொடர்பு கொள்ள முடியும். அத்துடன் அலு வலக நேரத்தில் 021 221 3861, 077 884 2577 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்ளவும்" என்றும் அரச அதிபர் அறிவித்துள்ளார். (ஐ)

## அரச வெசாக் நிகழ்வு இம்முறை புத்தளத்தில்!

கொழும்பு, மார்ச் 29

மஹாநாயக்க தேரர்கள் மற்றும் அகில இலங்கை பௌத்த சமாசங்களின் பரிந்துரைகளுக் கமைய 2023 (புனித பௌத்த வருடம் 2567) அரச வெசாக் உற்சவத்தை பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார விவகாரங் கள் அமைச்சு மற்றும் பௌத்த விவகாரங்கள் திணைக்களமும் இணைந்து புத்தளம் மாவட் டத்தின் சிலாபம், மாதம்பே கெபல்லாவெல சிறீ ரத்னசிறி பிரிவெனா விகாரையில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கமைய மே 2 ஆம் திகதி தொடக்கம் 8 ஆம் திகதி வரை வெசாக் வாரமாகப் பிரகடனப் படுத்துவதற்கும், அதற்கு இணையாக பல்வேறு சமய மற்றும் கலாச்சார நிகழ்ச்சித் திட்டங்களை நடை முறைப்படுத்துவதற்காக புத்த சாசன, சமய மற்றும் கலாச்சார விவகாரங்கள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஐ)


## சர்வதேச மன்னிப்பு சபையின் பணிப்பாளர் இலங்கை வருகை!

கொழும்பு, மார்ச் 29

சர்வதேச மன்னிப்புச் சபையின் சிரேஷ்ட பணிப்பாளர் டெப்ரோஸ் முச்சினா உத்தியோகபூர்வ பயணமாக இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

நேற்று செவ்வாய்கிழமை இடம்பெற்ற சர்வதேச மன்னிப்புச் சபையின் சர்வதேச அறிக்கையின் பிராந்திய வெளியீட்டு விழாவில் பங்கேற்கவே அவர் இலங்கை வந்தார்.

இந்நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ள சர்வதேச மன்னிப்புச் சபையின் சிரேஷ்ட பணிப்பாளர் டெப்ரோஸ் முச்சினா சிறப்புரையும் ஆற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.03.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.